Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

மில்க்வைற்
நீல சோப்
10 சதம் கட்டியை
வாங்கி
அதிக லாபம் அடையுங்கள்.

ஈழநாடு
EELA NADU
வார மலர்
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 இதழ் 14
பராபவ மாசி 12 ஜுலை 13 (24-2-67) வெள்ளிக்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சி
# காங்கிரஸ் மந்திரிசபை ராஜினமா

## காமராஜர், பக்தவத்சலம் தோல்வி; இந்திரா காந்தி வெற்றி

### திராவிடநாடு கோரிக்கையை தி. மு. க. எழுப்பாது —அண்ணா

''மக்கள் தீர்ப்பை ஏற்கிறோம் தமிழ்நாட்டை ஆண்டவன் காப்பாற்றட்டும்''

—பக்தவத்சலம

சென்னை, பெப். 23

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம அரசாங்கம அமைப்பது உறுதியாகிவிட்டது. தமிழ் நாட்டில் காங்கிரஸ் அரசாங்கம தோல்வியடைந்துவிட்டதென்பதை தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம. பக்தவத்சலம ஒப்புக்கொண்டார். இன்று அல்லது நாளை தமது மந்திரிசபையின் ராஜினமாவைச் சமர்ப்பிக்கப்போவதாக அவர் தெரிவித்திருக்கிறர்.

ஸ்ரீ பெரும்புதூரில் போட்டியிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தி. மு. க. சார்பில் போட்டியிட்ட திரு. இராஜரத்தினத்தால் தோற்கடிக்கப் பட்டார்.

மத்திய அரசாங்கத்துடன்மோதல் ஏற்படவேண்டுமென்ற விருப்பம் இல்லையென்றும் மத்திய அரசாங்கத்தின் பூரணஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் தி.மு. க. அரசாங்கம் பதவிஏற்று நிர்வாகம் நடத்துல் என்றும் திரு. சி. என். அண்ணாத்துரை தெரிவித்திருக்கிறர்.

**காமராஜர் தோல்வி ஓர் அதிர்ச்சி**

காங்கிரஸ் அக்கிராசனர் திரு. குமாரசாமி காமராஜர் விருதுநகர்த் தொகுதியில் தி. மு. க. அபேட்சகரான சட்டக்கல்லூரி மாணவன் சீனிவாசனல் 1235 வாக்குளால் தோற்கடிக்கப்பட்டார். திரு. காமராஜரின் தோல்வி காங்கிரசிற்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. காங்கிரசுக்குமட்டுமல்ல இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அதிர்ச்சி ஏற்கிடுத்தியிருக்கின்றது.

**காங்கிரஸ்ஆட்சி**

மத்திய பிரதேசம், ஹரியானு, திரிபுரா ஆகிய மூன்று ராஜ்யங்களிலும் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிப்பொறுப்பேற்கும். இங்கு ஆட்சி அமைபசதற்கு காங்கிரசுக்கு அறுதியான பெரும்பான்மைப்பலம் கிடைத்திருக்கிறது. பஞ்சாபில் இன்னும் ஆறு ஸ்தானங்கள் கிடைத்தால் காங்கிரசுக்கு அறுதியான பெரும்பான்மைப் பலம் கிடைக்கும். கேரளத்தில் இடதுசாரி கம்யூனிஸட் அரசாங்கம் அமைக்கும் பலம் பெற்றுவிட்டது. இப்போதுள்ள நிலையில் கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் காங்கிரஸ் ஆட்சி இம்முறை ஏற்படமாட்டாது என்பது தெளிவாகிவிட்டது.

**பாட்டீல், அதுல்யகோஷ் தோல்வி**

யூனியன் ரெயில்வே மந்திரி எஸ். கே. பாட்டீல், இந்திய காங்கிரஸ் பொதுக்காரியதரிசி அத்துல்யகோஷ் தோல்வியடைந்தனர். இலங்கையில் முன்பு இந்திய ஹைமிஷனராகப் பதவிவகித்த ஸி. ஸி. தேசாய் சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

[2-ம் பக்கம் பார்க்க]

## நிஸாம் மரணம்

ஹைதராபாத், பெப். 23

உலகின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒருவரான ஹைதராபாத் நிஸாம் இன்று அதிகாலை காலமானர்,

## அதிபர் சுகர்ணே பதவி துறப்பு?

ஜாகர்த்தா, பெப். 23

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணே தமது அதிகாரங்களை இராணுவத் தலைவர் ஜெனரல் சுஹார்ட்டோவிடம் ஒப்படைத்துவிட்டதாக ஜாகர்த்தா வானெலி அறிவித்துள்ளது.

ஜெனரல் சுஹார்ட்டோ, முப்படைத் தலைவர்கள் ஆகியோரின் வற்புறுத்தலின் பேரிலேயே அதிபர்சுகர்ணே தமது அதிகாரங்களை ஒப்படைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிபர் சுகர்ணே பதவி துறக்கவேண்டுமென்று கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும் இந்தோனேஷிய இராணுவ நீதிமன்றம் சுகர்ணேவுக்கு எதிராகச் சில குற்றச்சாட்டுகளை சுமத்தி விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கூறியிருந்ததும் சுகர்ணே தமது பதவியிலிருந்து விலக கடைசிவரை மறுப்புத் தெரிவித்து வந்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

## பிரதமர் இந்திரா வெற்றி

புதுடில்லி, பெப். 23

பிரதமர் திருமதி இந்திரா காந்தி உத்தரபிரதேசததில் ராய்பரேலித் தொகுதியிலிருந்து மிகப்பெரும்பான்மையான வாக்குகளால் லோகசபைக்குத் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறர்.

பஞ்சாபில் ஜலந்தர்தொகுதியிலிருந்து பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் லோகசபைக்கு 31,000க்கு அதிகமான வாக்குகளால் வெற்றியீட்டியிருக்கிறர்.

## புகையிரதப் பகுதியில் புதிய பிரிவு

**விரைவில்உதயமாகும்**

மாவிட்டபுரம், வெள்ளி புகையிரதப் பகுதியின் செலவைக் குறைப்பதை அவதானிக்க புதிய பிரிவு ஒன்று விரைவில் அமைக்கப் படவிருக்கிறது.

## ஏ.கே.கோபாலனும் மனைவியும் வெற்றி

திருவனந்தபுரம், பெப். 23

கேரளத்திலுள்ள 19 லோகசபைத் தொகுதிகளில் இதுவரை 12 தொகுதிகளுக்கான முடிவுகள் வெளியாகிவிட்டன. இந்திய மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஏ. கே. கோபாலன் கஸர்கோட் தொகுதியிலிருந்தும், அம்பலப்புழைத் தொகுதியிலிருந்து திருமதி சுசீலா கோபாலனும் லோகசபைக்குத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

சிறையின் கீழ்த்தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட கேரள முன்னள் முதல் மந்திரி திரு. ஆர். சங்கர் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் அபேட்சகர் கே. அனிருத்தனல் தோற்கடிக்கப்பட்டார். திரு. கோபாலன் தம்முடன் போட்டியிட்ட ஜனசங், காங்கிரஸ் அபேட்சகர்களை விட ஒருலட்சத்துக்கு அதிகமான வாக்குகளாலும் திருமதி கோபாலன் தம்முடன் போட்டியிட்ட காங்கிரஸ், சுதந்திரா அபேட்சகர்களை பத்தாயிரம் வாக்குகளாலும்தோற்கடித்தார்.

2-ம் பக்கம் பார்க்க

இலங்கை தியாகராஜகான சமாஜம்
ஆதரவில்
அகில இந்திய கர்நாடக இசைமேதையும்
பிரபல சினிமா பின்னணி பாடகருமான
ஸ்ரீபாலமுரளிகிருஷ்ணவின்
இன்னிசைக் கச்சேரி
ஸ்ரீ கேசவுலு -- வயலின்
ஸ்ரீ உபேந்திரன் -- மிருதங்கம்
காலம்:- 27-2-67 திங்கட்கிழமை
நேரம்:- மாலை 6-30 மணி
இடம்:- யாழ். நகரமண்டபம்
டிக்கட் விபரம்
ரூபா 25/-, 15/-, 10/-, 5/-,
2445

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜாதிராஜ ஸ்ரீமான் கொண்டக்டர்

மாறி வரும் இந்த மண்ணுலகில் அதிவேகமாக மாறும் ஒரு வர்க்கம் கொண்டக்டர் வர்க்கம்.

கொண்டக்டர்களில் தேயிலைத் தோட்ட கொண்டக்டர், வாத்தியக் கோஷ்டிக் கொண்டக்டர், மின்சாரக் கொண்டக்டர் என்று பல இனங்கள் இருந்த போதிலும் வெறுமனே கொண்டக்டர் என்று கூறும்போது அது ஒருவரைத் தான் குறிக்கும், பஸ் கொண்டக்டர்.

இ போ ச[ங்கையினம்] வருவதற்கு முன்பு பஸ் போக்குவரத்து முழுவதும் கொம்பனிகள் ஆட்சியிலிருந்தது. அக்காலத்தில் அவர் வைத்ததுதான் சட்டம். 'இறங்கெண்டால் இறங்கு, இருஎண்டால் இரு, எழும்புஎண்டால் எழும்பு' - இப்படியெல்லாம் அவர் தாறுமாறுகச்சட்டம் போடுவார். மத்தியானம் ஆனதும் அவருடைய மூச்சில் ஒரு வாடை வீசும். அதற்குப்பின் அவரது சர்வாதிகாரம் சர்வமோசமாகிவிடும்.

இ. போ. ச [ங்கையினம்] வந்ததும் அவரும் அதில் ஐக்கியமானுர். அவருக்கு ஒரு பொலிவான காக்கிக் கோட்டை அணிவித்தார்கள். உடனே அவர் ஒரு முழம் உயர்ந்து விட்டார். பொலீஸ் காரனைப்போலத் தமக்கும் ஒரு காக்கிக் கோட் கிடைத்ததில் அவருக்கு அளவற்ற மகிழ்ச்சி. சுயகௌரவம் ஒரு ருத்தல் ஏறிவிட்டது. ஆயினும் அவருடைய குணங்கள் மாறவில்லை. கொம்பனியிலேயே இன்னும் இருப்பதாக நினைத்துக் கொண்டார். அதில்இருபது, இருபத்தைந்து வருடங்கள் இருந்து மெருகேறியகளிம்பை கழற்றுவது அவ்வளவு சுலபமல்ல.

முதல்நாள் இரவு நல்ல முசுப்பாத்தியில் படுத்தவர் அதிகாலை 'டியூடி'க்குப்போக நேரமாகிவிட்டது. முகமும் கழுவாமல், ஒரு வருடம் தண்ணீரைக் காணுத கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு ஓடிப்போய் பஸ்ஸில் ஏறிஞர். ஒரு கிழமையாக 'ஷேவ்' எடுக்காத அவருடைய முகம் வேறு முள்ளம் பன்றியைப் போலக் காட்சியளித்தது.

அவரோடு வேலைக்குச் சேர்ந்த வேருெரு கொண்டக்டரைப்பார்த்துப்பொருமைப் பட்டார். 'இவன் எப்படிக் காலையில் எழுந்து குளித்துவிட்டு, நெற்றி நிறைய விபூதியை அப்பிக் கொண்டு, ஒரு ரூபாய் அகலத்தில் சந்தனப் பொட்டும் வைத்துக்கொண்டுவேலைக்கு வந்துவிட்டான்' என்று ஆச்சரியப்பட்டார்.

இப்பொழுது காலம் மாறிவிட்டது. மேலே கூறிய ராஜாதிராஜ வர்க்கத்துக்கு நரை, திரை, மூப்பு வந்து சேர்ந்திடவே அதை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டார்கள். நமது நண்பரும் வேண்டாவெறுப்பாக வீடு போய்ச் சேர்ந்துவிட்டார்.

அவருடைய இடத்துக்குப் பதிலாக இன்றுகால்சட்டையும், நைலோன் ஷேர்ட்டும், காலில் செருப்பும் அணிந்த இளம் வாலிபன் ஒருவன் காணப்படுகிருன். இவன் எஸ். எஸ். ஸி. படித்தவன். பிரயாணிகளுடன்மரியாதையாகப் பேசுகிருன். புதிதாக வேலைக்கு வந்தவனுதலினுல் மேலதிகாரிகளுக்குத் தனது கெட்டித்தனத்தைக் காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் கண்ணியமாகத் தன் வேலையைக்கொண்டு போகிருன்.

காலம் எப்படி மாறுகிறதோ, யார் கண்டார்கள்?

--வழிப்போக்கன்

முல்லைத்தீவு கண்ணன் மரணம்

# மகன் கொலைசெய்ய தந்தை புதைத்தாராம்

## பொலிஸ் இரகசிய விசாரணையில் மேலும் புதிய திருப்பம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம், வெள்ளி

முல்லைத்தீவில் அண்மையில் காணுமல்போய் சில தினங்களுக்குப்பின்னர் தண்ணீரூற்றில் பாழ்மண்டபத்துக்கருகே புதைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட கண்ணனின் சடலம் பற்றி இரகசியப் பொலிசார் நடாத்திவரும் புலன் விசாரணையில் மேனும் பல புதிய தகவல்களைப் பொலிசார் சேகரித்துள்ளனர். இம்மரணம்பற்றிய கடைசித் தகவல்களை புதிய திருப்பமாகவிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவில் விசாரணைகளை முடித்துக்கொண்டு இவ்வாரத்தில் யாழ்ப்பாணம் திரும்பவிருந்த விசேஷ பொலிஸ் கோஷ்டியினர் இம்மரணம்பற்றி மேலும் புலன் விசாரணை செய்யவிருப்பதால் இன்னும் சில தினங்கள் முல்லைத்தீவில் தங்கியிருப்பார்களென அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக துப்புத்துலக்க மேலும் மூன்று இரகசியப் பொலிசார் கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

மரணமான கண்ணன், வீட்டிலிருந்து காணுமல் போன கடைசித் தினத்தன்று ஐந்துசிறுவர்களுடன் தென்னைவளவொன்றிற்கு இளநீர் பிடுங்கச் சென்றதாகவும், பின்னர் கண்ணன் திரும்பவில்லையெனவும் ஏற்கெனவே பொலிசார் நடத்திய இரகசிய விசாரணையில் தெரியவந்தது. இம்மரணம்பற்றி புலன் விசாரணை செய்ய கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரனுடன் எட்டுப் பொலிஸாரைக் கொண்ட பொலிஸ்கோஷ்டி மேலும் நடாத்திய இரகசிய விசாரணையில் பலபுதிய தகவல்கள் கிடைத்திருப்பதைத் தொடர்ந்து கண்ணனின் தந்தையுடன் காணித் தகராறொன்றில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் துரையப்பா என்பவரையும் அவரது மகனுன 12 வயதுச் சிறுவனுன ஜெயக்கொடி என்பவரையும், மேலும் இரண்டு சிறுவர்களையும் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து கிளிநொச்சிக்குக் கொண்டுவந்துள்ளார். மேலும் இரண்டு சிறுவர்கள் முல்லைத்தீவில் வைத்து இரகசியப் பொலிசாரால் விசாரணை செய்யப்படுகின்றனர்.

கண்ணன் காணுமல்போன கடைசித் தினத்தன்று துரையப்பாவின் மகனுன ஜெயக்கொடி உட்பட மேலும் ஐந்து சிறுவர்களுடன் குருவிகள் பிடிப்பதற்காக வயலுக்குச் சென்ருனும். அப்போது ஜெயக்கொடி கத்தியொன்றையும் கொண்டு சென்ருனும். வழியில் தென்னை வளவொன்றில் மற்றச் சிறுவர்கள் இளநீரைப் பிடுங்கிக் கண்ணனுக்கும் கொடுத்துக் குடித்தார்களாம். குடித்துக்கொண்டிருக்கையில் கண்ணனுக்கும் ஜெயக்கொடிக்கு மிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாம். அதனுல் ஜெயக்கொடி சிறுகல்லொன்றினுல் கண்ணனின் மண்டையில் தாக்கினுராம். மற்றைய சிறுவர்கள் வீட்டுக்குச் சென்றபின்னரும் கண்ணன் தனிமையிலேயே தென்னை வளவில் இருந்தானும். அப்போது மீண்டும் அங்கே வந்த ஜெயக்கொடி கண்ணனைத் தாக்கியதோடு, உனது அப்பர் பெரிய சண்டியனு- நீயும் சண்டியனு?' எனக் கேட்டுவிட்டு கைகளால் தாக்கியதோடு கத்தியாலும் கண்ணனின் தலை, மார்பு, வயிறு ஆகிய உறுப்புகளில் தாக்கினுராம். அதனுல் கண்ணன் மயக்கமுறவே, சம்பந்தப்பட்ட 2 சிறுவர்களின் உதவியுடன் கண்ணனை இழுத்துக்கொண்டு போய் ஒரு பற்றையில் ஜெயக்கொடி போட்டானும்.

இதன் பின்னர் ஜெயக்கொடி தனது தகப்பனுரான துரையப்பாவிடம் விஷயத்தைச் சொல்லி கண்ணனின் உடலை வேறுபற்றையொன்றிற்கு அருகாமையில் கிடங்கு வெட்டிப் புதைத்துவிட்டுச் சென்ருர்களாம். ஆனுல் அன்று நள்ளிரவு 12 மணியளவில் துரையப்பா மீண்டும் கண்ணன் புதைக்கப்பட்ட இடத்துக்கு வந்து அவனது உடலைக்கொண்டு போய் சம்பந்தப்பட்ட பாழ் மண்டபத்துக்குஅருகே வேறு கிடங்கை வெட்டி கண்ணனின் உடலை அதற்குள் புதைத்தாராம்.

மேற்கண்ட தகவல்களை சேகரித்ததைத் தொடர்ந்தே பொலிஸார், துரையப்பாவையும், ஜெயக்கொடியையும் மேலும் சம்பந்தப்பட்ட 2 சிறுவர்களையும் கைது செய்து விசாரணை செய்கின்றனர். பொலிஸார் தொடர்ந்து மேலும் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# நவரத்தினம், மாணிக்கம் மீது நடவடிக்கை: தமிழரசு ஆலோசனை

கொழும்பு, வியா

இலங்கைஇந்திய ஒப்பந்த அமுல் மசோதா சம்பந்தமாக தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம், செனட்டர் மாணிக்கம் ஆகியோர் நடந்துகொள்ளும் முறைசம்பந்தமாக இவர்கள்மீது எவ்வித நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி தமிழரசுக் கட்சி செயற்குழுக்கூட்டத்தில்விரிவாக ஆலோசனை செய்யப் படவிருக்கிறது.

இம்மசோதாவை ஆட்சேபித்து செனட்டர் பதவியை மார்ச் மாதம் 5-ம் திகதி ராஜினுமாச்செய்யவிருக்கும் செனட்டர் மாணிக்கம் செனட்டில் இது சம்பந்தமாக எதையும் பேசாது தடுக்கப்பட வேண்டுமெனவும் சில அங்கத்தவர்கள் கட்சியின் மேலிடத்தைக் கேட்டிருப்பதாகவும்அறியப்படுகிறது. அவர் அவ்விதம் பேச அனுமதிப்பது கட்சி சில அந்தரங்க விஷயங்களை வெளியில் கொண்டுவருவதற்கு வழிவகுத்து விடக்கூடும் எனஇவர்கள் அஞ்சுவதாகவும் தெரிகிறது,

—— ——

## வெலிமடை எம. பி. பதவிப்பிரமாணம

கொழும்பு, வியாழன்

வெலிமடைத் தொகுதியில் வெற்றிபெற்ற புதிய எம். பி.யான திரு. பேர்சி சமரவீரா இன்று பார்லிமெண்டில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

## 'உள்மனமும் புறமனமும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஒருவனின் கடமை ஒருவனுடைய செயலும் உள்ளமும் ஒத்து இயங்குகின்ற கர்மயோக நிலையிலேயே ஆரம்பமாகின்றது. அவன் தனது கடமையினுலேயன்றி துறவினுலே எவ்விதத்திலும் ஈடேற்றமடையப் போவதில்லை. ஆகையினுல் ஒருவன் தனது கடமையினைத் தவருது செய்வானேயானுல் அவன் சர்வோதய இலட்சியத்தை அடைகின்ருன். இதற்காக அன்ருட வாழ்க்கையிலே உள்மனமும், புறமனமும் ஒன்றுபட்ட செய்கையிலே மனிதன் ஈடுபட வேண்டும்'' என ஏழாலைச் சர்வோதயஇயக்க பஞ்சாயக் கூட்டத்தில் திரு. மு. ஞானப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டார். (ந. நி)

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவி மத்திய பாதுகாப்பு மந்திரி ஏ. எம். தோமசும் தோல்வியடைத்தார். பீர்மேடு தொகுதிதல் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் அபேட்சகர் பி. கே. வாசுதேவ நாயர் வெற்றிபெற்ருர்.

## தமிழ்நாட்டில்--

[1-பக்கத்தொடர்ச்சி]

### பக்தவத்சலம விளக்கம

தமிழ் நாட்டில் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கையில் தி. மு. க வின் பலம் அதிகரித்துவந்ததைக்கண்ட தமிழ் நாட்டு முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தமது அரசாங்கம் தோல்வியைஒப்புக்கொண்டு விட்டதென்றும் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைபப்தென்றுமக்கள்அளித்ததீர்ப்பை மகிழ்ச்சியோடு தாம் ஏற்றுக்கொள்வதாகவும்தெரிவித்தார். புதிய அரசாங்கம்அமைக்கும்திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு திரு. பக்தவத்சலம் வாழ்த்துத்தெரிவித்துவிட்டு, 'ஆண்டவன் மக்களைக்காப்பாற்றுவராக' என்று கூறிஞர்.

### கூட்டணி ஆதரவுடன் தி.மு. க. மந்திரிசபை

தேர்தல் முடிவுகள் தி. மு. கழகத்துக்கு வெற்றிமேல் வெற்றி அளித்துவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை 'தி. மு. கழகத்தின்மீது மக்கள் நம்பிக்கை வைத்து ஆட்சிப் பொறுப்பை அதனிடம் ஒப்படைப்பது என்று தீர்மானித்துள்ளார்கள். இப்பொறுப்பை கழகம் சரிவரநிறைவேற்றும்' என்று கூறிஞர். திராவிட முன்னேற்றக் கழகம் இதர அரசியல் கட்சிகள் சிலவற்றுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட்ட போதிலும் தி. மு. கழகம் தனிக் கட்சியாக அரசாங்கம் அமைப்பதற்கு கூட்டணிக்கட்சிகளின் அங்கீகாரத்தை ஏற்கனவே பெற்றிருக்கிறது'' என்று திரு. அண்ணுதுரை கூறிஞர். தி. மு. கழகம் தனியாகஅரசாங்கம் அமைப்பதற்கு அறுதியான பெரும்பான்மைப் பலம் கிடைக்காது போனுலும் கூட்டணியின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் தி. மு. கழகம் மந்திரி சபை அமைக்கும் என்று திரு. அண்ணுதுரைகூறிஞர்.

### ''திராவிடநாடு கோரிக்கை இல்லை''

தமிழ்நாட்டில் திமுகஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது மத்திய அரசாங்கத்தின் பூரணஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது. அந்த ஒத்துழைப்புடன்தான் அரசாங்கம்அமைக்கவிருக்கிறது. மத்திய அரசாங்கத்துடன் மோதல் ஏற்படவேண்டுமென நாங்கள் விரும்பவில்லைஎன்றும் திரு. அண்ணுதுரை கூறிஞர். திராவிட நாடு கோரிக்கையை தமது கட்சி எழுப்பமாட்டாது என்றும் அவர் கூறிஞர். ஆட்சி நிர்வாகத்தை சீராகநடத்துவதற்கு கழ்கத்துக்கு அனுபவமிருக்கிறதென்றும், ராஜாஜி, இஸ்மாயில்சாகிப் போன்ற முதிர்ந்த அரசியல் அறிஞர்களின் அறிவுரை அனுகூலம் இருக்கிறதென்றும் திரு. அண்ணுதுரைகூறிஞர்.

# வருமானவரி இலாகாவுக்கு கணக்குகாட்டாதரூ 30லட்டம்

## யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வருமானவரி இலாகாவுக்குக் கணக்குக் காட்டாமலிருந்த சுமார் 30 லட்சம் ரூபா யாழ்ப்பாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த திடீர் பரிசோதனை குழுவினர் நடாத்திய திடீர் வேட்டையின் போதே இது கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு கடைகளிலிருந்து இரண்டு வீடுகளிலிருந்துமே இந்த 30 லட்சம் ரூபாவையும் பொலிஸாரும் வருமானவரி பரிசோதனைக் குழுவினரும் கண்டு பிடித்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த [illegible] கொழும்பிலிருந்தும் கடைக்குச் 'சீல்' வைத்த பின்னர் அவரது யாழ்ப்பாணத்திலுள்ள கடையையும் வருமானவரி இலகாவினர் சோதனையிட்டபோது இங்கிருந்து வருமானவரி இலாகாவினருக்குக் கணக்குக் காட்டாதிருந்த சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும், பல்லாயிரக் கணக்கான ரூபா பணத்தையும் இவர்கள் கண்டு பிடித்துள்ளனர். சம்பந்தப்பட்ட நான்கு கடைகளையும், 2 வீட்டையும் சோதனையிட்ட பின்னர் அங்குகண்டு பிடிக்கப்பட்ட பணம், பொருள் ஆகியன பற்றிய தஸ்தாவேஜுகளுடன் சோதனைக் குழுவினர் நேற்று கொழும்பு திரும்பியுள்ளனர். இவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், இதுபற்றி கொழும்பு சென்றதும் ஆராயப்படுமெனவும் மேற்படி குழுவில் அங்கத்துவம் வகித்த முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சேமிப்பு மூலம் ரூ. ஐந்தரைக்கோடி பெற அரசாங்கம் திட்டம்

## யாழ்ப்பாணத்தில் நிதிமந்திரி அறிவிப்பு

—நமது நிருபர்—

யாழ்ப்பாணம் வெள்ளி

''நமதுநாட்டு மக்களை இன்றுமுக்கியமாக இரண்டு பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளன. முதலாவதாகப் பொருளாதாரப்பிரச்னையும் இரண்டாவதாக அதிகரித்து வரும்சனத்தொகையும் எமக்குமிகவுமசிக்கலையுண்டுபண்ணியுள்ளன. எமதுநாட்டுப் பொருளாதார நிபுணர்களும், வெளிநாட்டு விசேஷ நிபுணர்களும் இலங்கையில் அதிகரித்துவரும் சனத்தொகையின் விகிதாசாரத்தைக்கணக்கிட்டு மிகவும்கவலை தெரிவித்துள்ளனர். இலங்கையில்வருடாவருடம் இரண்டரை மூன்றுலட்சம் மக்கள் அதிகரித்து வருகிறார்களெனவும், இந்தசனத்தொகைச் விகிதாசாரத்தில் உலகிலேயே இலங்கைதான் முதலிடத்தை வகிக்கிறதெனவும், உலகநிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தசனத்தொகை அதிகரிப்பையும், நாட்டில் அதிகரித்துவரும் பொருளாதாரப் பிரச்னையையும் தேசியசேமிப்பு ஒன்றினாலேயே சுமுகமான முறையில் தீர்க்கலாம். அரசாங்கம் இதுதான் சிறந்த வழிஎன்று நினைத்ததாலேயே தேசியசேமிப்பு இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

மேற்கண்டவாறு யாழ். தேசிய வாரத்தை நேற்றையதினம் நிதியமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா பண்டத்தரிப்புமகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணம்செய்துவைத்துப்பேசுகையில்குறிப்பிட்டார். விழா ஆரம்பமாவற்கு முதல் பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து அமைச்சர் திரு. வன்னிநாயக்காவும், வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, மேலதிக மாவட்ட அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. டபிள்யூ. செல்வரத்தினம், யாழ். மாவட்ட காரியாதிகாரி திரு. ஆ. கந்தையா, வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், காரியாதிகாரிகள் என். மாணிக்கநடராசா ரி. முருகேசம்பிள்ளை ஆகியோர் மேளவாத்தியங்களுடன் விழா அரங்கிற்கு அழைக்து வரப்பட்டார்கள். கல்லூரி முன்றலில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம், கல்லூரி அதிபர் செல்வி கே. சரவணமுத்து ஆகியோர் அமைச்சருக்கு மலர்மாலையிட்டு வரவேற்றார்கள்.

கல்லூரி மாணவர்கள் வரவேற்புப் பாட்டுக்களைப்பாடி அமைச்சரை வரவேற்றார்கள். சமுகஜோதி கேட் முதலியார் திரு. ஸி. தியாகராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற சேமிப்பு வாரவிழாவில் அமைச்சர் திரு. வன்னிநாயகா தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது -

நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க நாம் ஒவ்வொருவரும் தேசிய சேமிப்பில் பங்கு கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். தேசிய அரசாங்கம் இந்த ஆண்டுதேசியசேமிப்பு மூலம் 550 லட்சம்ரூபாவை பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. இந்த முயற்சிக்கு தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பும் அவசியம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரது ஒத்துழைப்புமின்றி தேசிய ஒற்றுமையை எதிலும் பரிபூரணமாகவெற்றியடையச்செய்ய முடியாது என்பதனை உணர்ந்தே நாம் தேசியஅரசாங்கத்தை உருவாக்கினோம். அந்தத் தேசிய அரசாங்கம் தேசிய மக்களுக்காக ஆரம்பமாக்கியிருக்கும் தேசிய சேமிப்புத் திட்டம் நம் நாட்டிற்கே நன்மை பயப்பதற்கானதாகும். ஒவ்வொரு மக்களும் தமது நாளாந்த உழைப்பின் ஒரு பகுதியைச் சிறுகச் சேமித்து தேசிய சேமிப்புத் திட்டத்தில் சேகரித்தால் அப்பணத்தை சிலஆண்டுகளின் பின்னர் அவர்கள் வட்டியுடன் சேர்த்து எடுப்பது மாத்திரமன்றி, அந்தஇடைக்கால வேளையில் அவர்களது பணம் நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கவும் முக்கியமாக உதவுகின்றது. இந்தப் பணத்திற்கு பொதுமக்களிடமிருந்து வரிப்பணம் கூட அறவிட அரசாங்கம் விரும்பவில்லை. இந்த வேளையிலே ஒவ்வொருவரும் நாட்டின் நலனுக்காக உழைத்தவர்கள் என்ற பெருமையையும் அடைகின்றார்கள்.

நம் நாட்டின் பொருளாதாரப்பிரச்னையில் ஏற்றுமதி இறக்குமதி இன்று ஒரு முக்கியமானதாகவுள்ளது. 1965-ம் ஆண்டுடன் இன்று ஒப்பிட்டால் இலங்கை அரசாங்கத்துக்கு 24 லட்சம் ரூபா, ஏற்றுமதிப் பொருட்களால் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கையின் பாரம்பரியமான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, தென்னை, றப்பர் ஆகியன இந்த ஆண்டில் சர்வதேச சந்தையில் வீழ்ச்சியடைந்திருப்பதே இதற்குக்காரணமாகும். இருந்தபோதிலும் நாம் வருடாவருடம் அரிசி இறக்குமதிக்காக 39 கோடி ரூபாவையும், மிளகாய் இறக்குமதிக்காக 5 கோடி ரூபாவையும், பால் உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக சுமார் 8 கோடி ரூபாவையும், உருளைக் கிழங்கு இறக்குமதிக்காக 3 கோடி ரூபாவையும் செலவிட்டுவருகின்றோம். வெளிநாடுகளுக்கு நாம் பொருட்களை ஏற்றுமதி செய்து பெறும் ஊதியத்தின் சுமார் 3 பங்கு கூடுதலான பணத்தைச்செலவிட்டே இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்தப் பிரச்னைகளை நன்கு உணர்ந்தே தேசிய அரசாங்கம் நாட்டின் பல பாகங்களிலும் உணவு உற்பத்திக் குழுக்களை அமைத்துள்ளது. நம் நாட்டிலேயே அரிசி, மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களை நாம் உற்பத்தி செய்வதால் எமதுபணத்தை நாம் விரயமாக்காமல்அவைகளை உள்நாட்டிலேயேசெலவிட்டு நம் நாட்டைவளம் கொழிக்கும் நாடாக்கலாம். அடுத்து இன்று பிடவைகள் இறக்குமதி இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. நாம் வெளிநாடுகளிலிருந்து இன்று இறக்குமதி செய்ய அதன் விலை அதிகமாகவுள்ளதற்கு எமது ஏற்றுமதி வருவாய்போதாததாகவிருக்கின்றது. அதனாலேயே நம் நாட்டிலேயே நெசவுத்தொழிலை உற்பத்தி செய்வதிலும் நாம் அதிக அக்கறை காட்டிவருகின்றோம். அதற்காகப்பல இயந்திரங்களையும் இங்குஇறக்குமதிசெய்யநாம் எண்ணியுள்ளோம். இவைகளை வெளிநாடுகளிலிருந்து நாம் கடனுகப்பெறமுடியாது. இதற்கு ஒரேவழி அனைவரும் தேசிய சேமிப்பில் பங்குகொண்டு அப்பணத்தின் மூலம் இயந்திர சாதனங்களையும் மூலப்பொருட்களையும் இங்குஇறக்குமதி செய்யவும் நம்நாட்டில் கைத்தொழில், விவசாயம் ஆகியனவற்றை விருத்தி செய்யவும் உதவுவதே.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசுகையில் உலக நாடுகளுடன் இன்றுஇலங்கையை ஒப்பிட்டுப்பார்க்கையில் இன்று இலங்கைமக்களின் வாழ்க்கைத்தரம் மிகக் குறைவானதென்றும், பண்டைய எமது நாகரீகம், கலாச்சாரம், பண்பாடு, ஆகியனவற்றிற்கு இது மிகவும் வெட்கக்கேடானதென்றும், இதனை நிவர்த்தி செய்துஉலக நாடுகளுடன் எமது நாட்டையும், வளம் கொழிக்கும் நாடாக்க ஒவ்வொருவரும், தேசிய சேமிப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

தேசிய சேமிப்பு ஆணையாளர்திரு. வி. சச்சிதானந்தம், திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினார்கள். கல்லூரி மாணவிகளின் நாட்டி நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராஜா நன்றிதெரிவித்துப் பேசினார்.

---

**கல்வி**

**விஞ்ஞான வகுப்புக்கள் 3-3-67-ல் ஆரம்பமாகின்றன.**

1. இரசாயனம்
2. பௌதிகம்
3. தூய கணிதம்
4. உயர் கணிதம்
5. பிரயோக கணிதம்
6. உயிரியல்

ஆகிய பாடங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் காலை 9-00—மாலை 7-00 வரை நடாத்தப்படும். முழுப் பாடங்கட்கும் ரூபா 25/ மட்டும். விண்ணப்ப முடிவு திகதி 28-2-67. விண்ணப்பிக்க.

**வர்த்தக கலாசாலை,**
230, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

---

**சலக்கழிச்சல்**

**தோல்சம்பந்தமான**
சொறி, சிரங்கு,
தேமல், கரப்பன்
முதலியன குணப்படுத்த
உத்தரவாதம்.

**சச்சிதானந்தா**
**வைத்தியசாலை**

மிந்திரன் அம்பாள்
கோவிலடி,
துன்னலை வடக்கு,
கரவெட்டி P. O.

---

## யாழ். தொழில்நுட்பக்கல்லூரி சிரேஷ்ட தரமாக உயரும்

### தொழில்நுட்ப கல்வி இயக்குனர் தகவல்

உடுவில், வியாழன்

''சமீபகாலத்தில் தொழில் கல்வியின் மகத்துவம் உணரப்பட்டதால் அதைப் பெறும் வகையில் தொழில்நுட்பப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. பட்டதாரிப் பத்திரத்திற்கு சயமாகமட்டுமல்ல, 'டிப்ளோமா' பட்டம் பெறக்கூடிய அளவுக்கு தொழிற் கல்வியை நாம் இன்று வளர்த்துவிட்டோம். மாணவர்கள் இக்கல்வியில் காட்டும்ஊக்கம் காரணமாக எமது இரண்டாவது அபிவிருத்தித்திட்டத்தில் காலி-கண்டி-யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள தொழில்நுட்பப் பாடசாலைகளை சிரேஷ்ட தரத்திற்கு தரமுயர்த்த முடிவுசெய்துள்ளோம்.''

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலை தொழில் வகுப்பு மாணவ மன்றத்தினர் தமது ஐந்தாவது நிறைவு விழாவைக் கொண்டாடியபோதுபிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் திரு. டட்லி. கே. ஜி. டி. சில்வா மேற்கண்டவாறு கூறினார். இந்நிறைவு விழாவுக்கு பாடசாலை அதிபர் திரு. க. நாகலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. டட்லி. கே. ஜி. டி. சில்வா தொடர்ந்து கூறியதாவது :-

''தொழில் நுட்பக் கல்வி நாட்டின் இன்றைய நிலையில் மிகவும் இன்றியமையாதது. தொழில் கல்வியால் தான் நமது நாட்டின் அபிவிருத்தி செய்யமுடியும் என்று உணரப்பட்டுவிட்டது. யாழ்ப்பாண மாணவர்இக்கல்வியை பெறுவதில் மிகுந்த உற்சாகம் காட்டுவது மகிழ்ச்சி தருகிறது. நமது கல்வி அமைச்சரின் வெள்ளையறிக்கையில் பொதுக்கல்வி, தொழில் கல்வி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கடற்றொழில், விவசாயம் ஆகியவற்றை அபிவிருத்திசெய்யத் திட்டமிட்டுள்ளது.''

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சொக்கலிங்கம், திருவாளர்கள் சு. சுந்தரம்பிள்ளை, செல்வன் ஆ. மகேந்திரா, செல்வன் இலட்சியபூபதி ஆகியோரும் பேசினர்.

---

### இவர்களுக்கு மீண்டும வேலை

யாழ்ப்பாணம், வெள்ளி

1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-திகதி சரியான முறையில் கடமையாற்றவில்லையென்று யாழ் மாநகரசபை விசேஷ ஆணையாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட 12 மின்சாரப் பகுதி ஊழியர்களையும் வேலைக்கு திரும்புமாறு மாநகர சபை ஆணையாளர் நேற்று முன்தினம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமான விசாரணையை நடந்தவாரம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், மாநகரசபை விசேஷ ஆணையாளருமான திருஎஸ். சிமாணிக்கவாசகர் நடாத்தினர்.

ந. நி.

---

### குடிசை தீக்கிரை

உடுப்பிட்டி, வியா.

கரணவாய் தெற்கு சோளங்கன் என்னும் இடத்தில் உள்ள கறுவல் வாரி என்பவரது குடிசை தீக்கிரையானது. வீட்டினுள்ளிருந்த பொருள்களும் எரிந்துவிட்டனவாம்.

கரணவாய் தெற்கு கிராம சேவகர் திரு. கே. வேலாயுதம்பிள்ளை ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர்.

---

### திறப்பு விழா

நெடுந்திவு, வியா.

நெடுந்தீவு சித்தி விநாயகர் ஆலயத்தின் முன்றலிலுள்ள இந்து இளைஞர் மன்றத்தின் காரியாலயத்தின் புதிய கட்டடத்தை நெடுந்தீவு காரியாதிகாரி திரு. சோ. அருணாசலம் திறந்து வைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது !

## கண்ணடி பார்க்கும் நேரம்

சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய வாழ் நாளில் 6,000 மணி நேரம்-சுமார் 250 நாட்கள்-கண்ணுடியின் முன்னுல் நின்று தன்னை அழகு பார்த்துக் கொள்கிருள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## பரவெளியை சுத்தப்படுத்த புதிய கருவி

பரவெளியில் பூமியைச் சுற்றித் திரியும் வேண்டாத 'குப்பை கூழங்களை' மீண்டும் பூமியில் விழுமாறு செய்வதற்காக விசேஷமாக ஒரு கருவி தயாரிக்கப்பட விருக்கிறது. இந்த பலூன் போன்றிருக்கும் கருவி பர வெளியில் பூமியைச் சுற்றி வரும். வேண்டாத பொருள்களை மீண்டும் பூமியில் விழுமாறு செய்யும். இந்தக் கருவி பூமியிலிருந்து இயக்கப்படும்.

## இருதயம் இடம் மாற்றப்பட்டது

டாஷ்கண்டில் பிறந்த சிறுமியின் இருதயம் இருக்க வேண்டிய இடத்திலிராது நெஞ்சின் அடிப்பாகத்திலிருந்தது. சத்திர சிகிச்சை மூலம் இவரது இருதயம் அது இருக்கவேண்டியஇடத்துக்கு மாற்றப்பட்டது. இந்த சத்திர சிகிச்சையை செய்தவர் டாக்டர் கரீம் டகிரோவ்.

## கடல்களில் பறக்கும் பஸ்கள்

சிறு கடல்களில் ஓடுவதற்கான 'பஸ்' வண்டிகள் ரஷ்யாவிலுள்ள கோர்க்கி நகரில் நிர்மாணிக்கப்படுகின்றன. இதில் 48 பேர்கள் பிரயாணம் செய்யலாம். சக்தி மிக்க என்ஜின்கள் உருவாக்கும் காற்றமுக்கத்தில் இவை சறுக்கிச் செல்கின்றன.

## இப்படியும் நடக்கும்!

அவுஸ்திரேலியாவில் திருமணமாகிக்கொள்ள விரும்பும் யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் உதவி செய்யும் முகமாக செல்வி ஷீலா வாலிஸ் என்பவர் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். ஒரு வாலிபர் உதவி தேடி வந்தார். விபரங்களையெல்லாம் கேட்டு எழுதிவைத்தார் வாலிஸ். திருமணம் நடந்தது செல்வி வாலிஸுக்கும் உதவி தேடி வந்த இளைஞருக்கும். திருமணமானுலென்ன? ஸ்தாபனத்தைத் தொடர்ந்து நடத்தத்தான் போகிறேன் என்கிருர் திருமதி வாலிஸ்.

## உணவில்லாமல் இறப்பவர்கள் தொகை

உணவில்லாத காரணத்தாலும் போஷாக்கின்மையாலும் உலகில் வருடமொன்றுக்கு குறைந்தது 30 லட்சம் மக்கள் இறக்கிருர்கள் என ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபன அறிக்கை தெரிவித்துள்ளது.

## 1,200 புத்தகங்களுக்குமேல் எழுதியவர்

பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்சாண்டர்டுமாஸ் (1803—1870) 1,200 புத்தகங்களுக்குமேல் எழுதியுள்ளார். அதிக புத்தகங்களை எழுதியவர்களில் முதலிடத்தைப் பெறுபவர் இவர் எனலாம்.

## காகிதத்தில் கதிரை!

○ காகிதத்தில் கதிரைகளும் மற்றும் சில்லறைத் தளபாடங்களும் செய்து உபயோகப்படுத்தும் காலம் இப்போது வந்துவிட்டது.

காகிதக்கூழில் செய்யப்படும் கதிரைகள் இப்போது பிரிட்டனில் ஆரம்பபிரிவு பாடசாலைகளில் உபயோகிக்கப்படுகின்றன. சிறுவர்கள் இதனைப்பெரிதும் விரும்புவதாகவும் இக்கதிரைகளில் சௌகரியமாக உட்காரலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கதிரைகள் செய்வதற்கு அதிக பணம் தேவையில்லையெனவும் கூறப்பட்டுள்ளது.

# தேர்தல் பாரதம்

## நகைச்சுவை காண்டம்

சென்ற 15-ம் திகதி முதல் நடைபெற்ற இந்திய தேர்தலின்போது இடம்பெற்ற சில நகைச் சுவைச் சம்பவங்கள் இங்கு திரட்டித்தரப்படுகின்றன. விறுவிறுப்பாக நடைபெற்ற தேர்தலால் களைப்படைந்தவர்களும் ஓய்வாக இருந்து பார்க்கலாம்.

### மூன்றெழுத்தில் மூச்சிருக்கும்

○ குஜராத் கிராமமொன்றில் திருமணமான மூன்று மாப்பிள்ளைகள் தாலிகட்டியதும் மற்றைய சடங்குகளை நிறுத்திவைத்துவிட்டு திருமணக்கோலத்திலேயே வாக்களிப்பு நிலையத்துக்கு வந்து வாக்களித்தனர்.

### பேச்சு சுதந்திரம்

○ மதுரையில் சுரூர்லோக சபைத் தொகுதியிலுள்ள வேட சத்தூர் சட்டசபைத் தொகுதியில் வாக்களிக்கச் சென்ற ஒரு பெண், யாருக்கு தாம் வாக்களிக்கவேண்டுமென்பதை தேர்தல் அதிகாரியிடமே கேட்டாளாம். 'எந்தச் சின்னத்தின் மீது முத்திரையிடுவது?' என்று அப்பெண் கேட்டபொழுது தேர்தல் அதிகாரி தெரிவிக்க மறுத்து 'அதனை நீங்கள் தான் தெரிவுசெய்யவேண்டும்' என்ருராம் அப்பொழுது அந்தப்பெண் 'அதைச் சொன்னுல் என்ன குறைந்தா போய்விடும்?' என்று முகத்தைச் சுழித்துக்கொண்டாளாம்.

### ஒருமைப்பாடு

○ உத்தரப் பிரதேசத்தில் ஸிரோஜி மாவட்டத்தில் பழங்குடியைச் சேர்ந்த ஒரு குடும்பம் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தது. இக்குடும்பத்தில் குழந்தைகள், பெரியோர் எல்லோரும் அடங்கியிருந்தனர். வாக்களிப்பு நிலையத்துக்குள் நுழைந்து அங்குள்ள தேர்தல் அதிகாரிகளிடம் குழந்தைகள் உட்பட எல்லோரையும் வாக்களிக்க அனுமதிக்கவேண்டும் என்றும் இல்லாவிடில் திரும்பிச் சென்று விடுவோம் என்றும் அக்குடும்பத்தினர் நிபந்தனை விதித்தனர். தேர்தல் அதிகாரிகளினுல் அவர்களைச் சமாளிப்பது பெரியபாடாகிவிட்டதாம்.

### குடும்பக் கட்டுப்பாடு

○ வடஆற்காட்டில்பிள்ளைகளுடன்வரும் தாய்மார்கள் இலகுவில் வாக்களிக்கமுடிந்ததைத் தெரிந்துவைத்திருந்த சில கன்னிப்பெண்கள் இரவல் குழந்தைகள் 'பெற்று' வாக்குச்சாவடிக்கு சென்ருர்களாம்.

[3 பக்கம் பார்க்க[

சேகரிப்பு:
கணேஷ்

## இறந்தபின்

# தமது தோலை பாதுகாக்க விரும்பும் கலைஞர்!

லண்டனிலுள்ள டான் தொட்டர் வெல் என்ற 39 வயதுடைய கலைப்பிரியர் ஒருவர் இறந்தபின் தமது தோலைப் பாதுகாத்து மியூஸியம் ஒன்றில் வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான காரணம் இவரது உடல் முழுவதும் இவர் பச்சை குத்திக்கொண்டிருப்பதுதான்.

பல இயற்கைக் காட்சிகள் இவரது உடலில் காட்சியளிக்கின்றன இந்த அழகிய காட்சிகளை தாம் இறந்த பின்பும் பலர் ரசிக்க வேண்டும் என்ற ஆசையினுல்தான் தாம் இவ்வாறு தமது தோலைப்பாதுகாத்துவைக்குமாறு வேண்டுவதாக இவர் தெரிவித்துள்ளார்.

7 குழந்தைகளுக்கு தந்தையான இவரது ஆசை பற்றி இவரது மனைவியிடம் கேட்டபோது அவரது எண்ணத்தைத்தாம் வெகுவாக ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.


"லேடன்" LEYDEN
தயாரிப்புக்கள்
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
○ ரெறி சேட்
○ ரெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


[5ம் கலத் தொடர்ச்சி]

### அரிசியும் அரசியலும்

○ தமிழ்நாட்டிலுள்ள ஒரு தொகுதியில் வாக்குச்சாவடியில் வாக்களித்துவிட்டு ஒரு வயோதிப மாதுகேட்ட கேள்வி இது: 'குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களித்தால் அரிசி கிடைக்கும் என்றீர்களே, வாக்களித்தாகிவிட்டது, எங்கே அரிசி?'

### 'படைபலம்'

சென்னையில் ஒரு தொகுதியில் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் பிரசாரத்துக்காக விமானம் ஒன்றைச் செய்து தொங்க விட்டிருக்கிருர்கள். மற்ற ஒரு கட்சி பீரங்கி ஒன்றைச் செய்து அதற்குப் பக்கத்தில் வைத்திருந்தார்கள்.

### 'உயிர்களிடத்தில் அன்புவேண்டும்'

வாக்காளரிடமிருந்து வாக்குகளைப்பெற வேட்பாளர்கள், புருகுரங்குமாடுமுதலிய பறவை, விலங்கினங்களையும் உபயோகித்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

## தகர உடைகள்

இப்போது தகரத்திலும் உடைகள் வந்துவிட்டன, அலுமினியத்தகடுகளில் பளபளக்கும் உடைகளுக்கு இப்போது அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதால் நாகரிக உடைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனங்கள் இப்போது தகரங்களில் தமதுகைவேலைகளைக் காண்பிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. மேல் நாடுகளில் இந்த [illegible] விரைவாகப் பரவிவருகின்றன.




சென்ற் அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261, 4261.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களச் சிறுகதை

# நினைவுகள் ஆயிரம்!

பியசேன ரத்துவித்தனே
தமிழில்: பெரி. சண்முகநாதன்

எங்கள் தோட்டத்துக்கு முன்னல் அந்தப் பெரிய பாச்குமரம் நின்றுகொண்டிருந்தது. அதை நான் பார்க்கும் ஒவ்வொரு தடவையும், அது எனது கடந்த காலத்தைப் பற்றி நினைவுறுத்தும். எனது அம்மா, என்னை அந்த மரத்துடன் கட்டி வைத்து அடித்ததருணங்களெல்லாம் என் நினைவுக்குப்படும், நான் ஏதாவது குறும்பு செய்யும் ஒவ்வொரு தடவையும் அம்மா என்னை அந்த மரத்தண்டை இழுத்துக்கொண்டு போய்விடுவாள்.

இந்தப் பாக்கு மரம் இவ்வளவு பெரிதாக பூமியின் தயவால் மட்டும் வளர்ந்துவிடவில்லை. பதிலாக எனது நினைவூற்றுகளின் குளுமையிலேயே அது இப்படிமதர்த்து நிற்கிறது என்று அடிக்கடி நினைத்துக்கொள்வேன்.

நான் அந்த மரத்தை இப்போது கூர்ந்து பார்க்கின்றேன். அதனுடைய சிம்பு வேர்களெல்லாம் பூமியினுள் புகுந்து மண்துகள்களைமருவியிருப்பது எப்படியோ எனக்குத் தெரியத்தான் செய்கிறது. கடந்தகாலக் காட்சிகளும் கண்முன் விரிகின்றன.

நான் கடந்தகால நினைவுகளிலிருந்து மீண்டு, நிகழ்காலத்துக்கோ எதிர்காலத்துக்கோ வந்துவிட முயல்கிறேன். ஆனல் ஒவ்வொரு தடவையும் எனது முயற்சிகள் வீணுகி வீணுகி மீண்டும் மீண்டும் கடந்தகால நினைவலைகளில் அகப்பட்டுக் கொள்வதை உணர்கின்றேன்.

நான் முன்பு மிகவும்குறும்புக்காரனுக - அம்மாவுக்கே பெரும்சோதனையாகஇருந்தபடியால் தான் அம்மா என்னை அப்படி அடித்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அடிப்பதன் மூலம், என்னை எனது முரட்டுச்சுபாவத்திலிருந்து மீட்டுவிடமுடியும் என்ற நினைப்பில்தான் என்னை அம்மா ஒவ்வொரு நாளும் அடித்திருக்க வேண்டும். ஆனல் இதையெல்லாம் உணர்ந்துங்கூட, இந்தமரத்தைப்பார்த்ததும் எனக்கு விழுந்த அடிகளின் பளுவும், நோவும் மட்டுமே என்னுணர்வுக்குத் தட்டுப்படுகின்றன.

ஃ ஃ ஃ

நான் விருந்தையில் உட்கார்ந்து, புத்தகமொன்றை எடுத்து வாசிக்க முயல்கிறேன். ஆனல் எனது கண்கள் எழுத்துக்களிலிருந்து விலக, எனது மனம் கடந்த காலத்தை நோக்கிப் போகிறது. மீண்டும் என் கண்கள் அந்தப் பாக்கு மரத்தை மொய்க்கின்றன. மனம் இப்போது துப்புரவாகக் கட்டவிழ்ந்து விட்டது.

முன்புறமிருந்த புல்தட்டுகளுக்குப் பக்கமாக ஒரு பெரிய பலாவின் அடிமரம் இருந்தது. வெட்டப்பட்ட அந்தஅடிமரம் வெய்யிலில் காய்ந்து, மழையினில் உக்கி, நாளாக ஆகஆகச்சிறிது சிறிதாய்ச் செத்துக் கொண்டிருந்தது. ஆனல் அந்த அடிமரத்துடன் சம்பந்தப்பட்ட கதை அந்த மாதிரியல்ல, அந்தக்கதை எனது மனதில் நன்றாய் வேர்விட்டு, ஒவ்வொருநாளும் புதிய கிளை வேர்களையும் ஓடவிட்டு உரமாகி விட்டிருந்தது. இன்று உக்கி, உலர்ந்து போய்க் கொண்டிருக்கும் இந்த பலா அடிமரந்தான் இரண்டு சகோதரர்களுக்கிடையேயான பாசத்தைத் துண்டு போட்டது. எனது அப்பாவும், பெரியப்பாவும் எப்படி ஒரே கருப்பையில் உருவெடுத்தார்கள் என்றுஅடிக்கடி நான் ஆச்சரியப்படுவதுண்டு. அவர்கள் இன்று சகோதரர்களாயில்லை. இதெல்லாவற்றிற்கும் காரணம் இந்தப் பலாமரமே தான்.

இந்த அடிமரமும், அந்தப் பாக்கு மரமும் பூமிக்குப் பெரியபிரச்சனையுடன்கூடிய பொறுப்புகளாயிருக்கவேண்டும்! இவ்விரண்டினையும் வேறு யாராவது சொந்தங்கொண்டு, அவர்களுடைய மனம் இவ்விரண்டும் எழுப்பிய பிரச்னைகளால் குழம்பியிருக்குமானல், அவர்கள் எப்போதோ இவ் விரண்டினையும் துப்புரவாக வெட்டியழித்திருப்பார்கள். ஆனல் நான் மாட்டேன்! அவற்றினை அழிக்கும் எண்ணம் என் மனதில் ஒரு போதும் முளைவிட இடமில்லை.

நான் அவைகளை, மனித சுபாவத்தைப் பற்றிய அருமையான அழியாத பாடங்களைப் போதித்த புண்ணிய ஆத்மாக்களாக மதிக்கிறேன்!

புத்தகங்களைப் படிப்பதன் மூலம் நான் ஏன் நேரத்தை வீணடிக்கவேண்டும்? இந்தப் பலா அடிமரத்தையோ, அந்தப் பாக்கு மரத்தையோ பார்க்கும் போது, ஒரு சிருஷ்டி கர்த்தாவுக்கு ஏற்படக்கூடிய எண்ணங்கள் எனக்கும் ஏற்படுகின்றன. காலையில் இவ்விடத்தில் உட்கார்ந்து அவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் நாள் கழிவதையே என்னல் உணரமுடிவதில்லை. மற்றவர்களுக்குப் புரியாத - ஆனல் எனக்குமட்டும் புரியக்கூடிய வார்த்தைகளில் அவைகள் என்னுடன் பேசுகின்றன. உலகில் வேறெந்த ஆத்மாவாலும் என் மனதில்எழுப்ப முடியாத உணர்ச்சிகளை அவைகள் என் மனதில் துளிர்க்கச் செய்கின்றன. மரங்களுக்கும், செடிகளுக்கும் உணர்வில்லையென்பவர்களெல்லாம் மடையர்கள்! எந்த மரத்திலோ, எந்தச் செடியிலோ, எந்தக் கொடியிலோ அங்கும் ஓர் ஆத்மா வாழ்கிறது!

ஃ ஃ ஃ

கடந்த காலத்தில், ஆயிரம் மரணங்களுக்குட்படாமல் இந்தப் பலா அடிமரம் என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறது! வெய்யிலிலும், மழையினிலும் தோய்ந்த வண்ணம் எங்கள் வீட்டைப் பார்த்த வண்ணம் அது இருக்கிறது. அந்த அடிமரம் அங்கில்லாமல் இருந்திருந்தால், நானும் இங்கு இருந்திருக்க மாட்டேன், எனது அப்பாவுக்கும், பெரியப்பாவுக்குமுள்ள சகோதரப் பிணைப்பு இன்றும் இருந்திருக்கும்!

''இந்த அடிமரம்நன்றாய்க் காய்ந்து போய் விட்டது. இதை நல்ல விறகாக்கலாம்... இதைக் கட்டாயம் வெட்டியாக வேண்டும் ..''—அந்த அடிமரத்தைப்பார்த்தபடியே விருந்தையில்நடந்து வந்த அம்மா இப்படிச் சொல்கிறாள்

நான் மிகுந்த அவசரத்துடன் சொன்னேன், ''அதை வெட்ட வேண்டாம்!...அது அப்படியே இருக்கட்டும்...''

''சே எதற்கு நீஇப்படிநிற்கிறாய்?... நான் எத்தனை தடவை அதை வெட்ட முயன்றிருக்கிறேன்.. அத்தனை தடவையும் நீ தடுத்திருக்கிறாய்...'' - எரிச்சலுடன் சொல்லியபடி அம்மா உள்ளே போகிறாள்.

கடந்த காலத்தைப் பற்றி நாம் எப்போதும் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகவே இந்த அஃறிணைப் பொருட்களை—எனது கடந்த கால எண்ணங்களுக்கு உயிரூட்டும் அந்தப் பலா அடிமரத்தையும், பாக்கு மரத்தையும் நான் மிகவும்நேசிக்கிறேன்! எனது அம்மாவின் உணர்வுகளுப், என்னுடைய உணர்வுகளும் துப்புரவாக மாறுபட்டவைதாம். அவள் கடந்த காலத்தை என்னைப்போலல்லாது வேறு விதத்தில் நினைந்து கொள்கிறாளோ? என்னல் மட்டும் ஏன் அப்படிமுடிகிறதில்லை?

ஃ ஃ ஃ

நான் மீண்டும் அந்தப் பலா அடிமரத்தைப் பார்க்கின்றேன். உள்ளே அம்மாவும் அப்பாவும் பேசுவதுஎன் காதில நன்றாய் விழுகிறது. அடிக்கடி அவர்கள் என்னையும், அந்த மரத்தையும். பின்பு தங்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொள்கிறார்கள்.

அப்பா என்னைஒரு தடவை துயரம் வழியும் கண்களுடன் பார்த்துவிட்டு அம்மாவிடம் சொல்கிறார்.

''அவனுக்குஏதோபிடித்து விட்டது போல் தெரிகிறது...''

அந்த வார்த்தைகளையோ, அப்பாவின் அந்தப் பார்வையையோ என்னல் என்றுமே மறக்கமுடியாது!

''இப்படியே போய்க் கொண்டிருந்தால் அவன் சித்தமே கெட்டுப்போய் விடும் போலிருக்கிறது...''

—இதுதான் எனதுஅம்மாவின் மறுமொழி; இந்த வார்த்தைகளையும் என்னல் மறக்கவேமுடியாது!

ஏன் அவர்கள்-அப்பாவும் அம்மாவும் எதையும் உணராதவர்களாய் என்னைப் பற்றி இப்படி நினைக்கிறார்கள்? நான் இந்தப் பலா அடிமரத்தையும், அந்தப் பாக்கு மரத்தையும்பற்றி நன்றாய், நிரம்பிய உணர்வுகளோடு சிந்திக்கின்றேன். அது பைத்தியம்தானு? கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபட்டு நிகழ் காலத்தில் எனது நினைவை நிறுத்துவது எனக்குப் பெரிய சிரமமாய்—சங்கடமாயிருக்கிறது.

''இன்று என்ன கிழமை...?''-அம்மா என்னிடம் வந்துநின்றுகேட்டாள். உண்மையில் அன்று என்ன கிழமை என்று தெரியாமல்தான் கேட்கிறாளோ? அல்லது என்னைச் சோதனை பண்ணத்தான் கேட்கிறாளோ? அல்லது கடந்த காலத்திலிருந்து, நிகழ்காலத்துக்கு என்னை இழுத்துவர அவள் மேற்கொள்ளும் முயற்சியோ?

அன்றுஎன்னகிழமையாகத்தான் இருந்தாலென்ன?என்னைப் பொறுத்தவரையில், உள்ளது இரண்டே இரண்டு நாட்கள்தாம்! ஒன்று கடந்த நாட்கள். மறறது நிகழ் கால நாட்கள்.

ஆனல் நான் இன்றும் கடந்த காலத்திலேயேமிதக்கிறேன். நிகழ்காலம்பற்றி எனக்குக்கொஞ்சம் கூட வெளிக்கவில்லை.

''இன்று என்ன கிழமை தம்பி?''-அம்மாவிடமிருந்து மீண்டும் அதே கேள்வி!

''இன்று...? இன்றுதான் நேற்று...?'' நான் இப்படிச் சொன்னேன்.

எனது பதில் அம்மாவைத் திகைப்படையச் செய்துவிட்டது போலும்.

''இன்றுதான் நேற்று...? சே! என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு இது?'' -மிகுந்த உருக்கத்துடனும், வியப்புடனும் சொல்லியவாறே தோட்டத்தில் இறங்கி நடந்தாள் அம்மா.

''ஆமாம்! இன்றுதான், 'நேற்று!' நாளைதான் 'இன்று'!''-நான் மீண்டும் உரமாகவே சொல்கிறேன்.

அம்மா அழத்தொடங்குகிறாள். ஏன்? எனது வார்த்தைகள் அவளை ஏன் அழவைக்கவேண்டும்? அவள் தனது பிள்ளைக்குப் பைத்தியம் என்று கலங்குகிறாளோ?

அவள் விம்மி வெடிக்கிறாள்,.. தனது பிள்ளைக்கு பைத்தியமே என்று கத்துகிறாள். நான் அம்மாவிலிருந்து கண்களை அகற்றி, காற்றில் ஆடிக்கொண்டிருந்த அந்தப் பாக்கு மரத்தைப் பார்க்கிறேன்!

---

## ★ஆபாசப்புத்தகங்களால் ★இளைஞர்களுக்கு ★ஏற்படும் தீமையென்ன?

பெருகிவரும் ஆபாசப் புத்தகங்கள், படங்கள் இவை இளைஞர்களின் வாழ்வில்என்னவிளைவை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி இரு பிள்ளைகளின் தந்தையான ஒரு பிரிட்டிஷ் டாக்டர் தமது கருத்தை வெளியிடுகிறார்.

மலிந்துவரும் ஆபாசப் புத்தகங்களால் உடையில்லாமல் பிடிக்கப்பட்டுவெளியிடப்படும் படங்களால் கௌரவமாக வளர்க்கப்பட்டுவரும் ஒரு சமூகம் மிகவும் சீரழிந்து விடுகிறது. பழக்கவழக்கங்களில், வாழ்க்கைமுறையில் நெளிவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

இவ்விதம் வெளியிடப்படும் ஒரு கீழ்த்தரமான படத்தை இளைஞன்ஒருவன் பார்ப்பதால் அவனது மனம் அதில் பதிந்துவிடுகிறது. இதனல் அவன் உரிய வயது வந்து திருமணம் செய்து கொண்டபின், சாதாரண முறையான மணவாழ்க்கை வாழ முடியாதிருக்கிறது.

வெறும் வியாபார நோக்கோடு எங்கெல்லாமோ இருந்து இறக்குமதிசெய்யப்பட்டு கள்ளச் சந்தையிலும் ஏன், இப்பொழுது கண்ட கண்ட இடங்களிலெல்லாம் விற்பனைசெய்யப்படும் இந்த அலங்கோலப் படங்களால் சிலரது அருமையான வாழ்க்கை அலங்கோலமாக்கப்படுகிறது.

பாடசாலையில் கீழ்வகுப்பில் படிக்கும் எனது மகன் தனது அறையில் இவ்விதி புத்தகமொன்றை வைத்தருந்தான். எனக்கு இது மிகவும்ஆச்சரியத்தைக் கொடுத்தது. உனக்கு இது எப்படிக் கிடைத்தது என்று அவனிடம் கேட்டேன். பாடசாலையில் சக மாணவனிடமிருந்து அந்தப் புத்தகத்தை வாடகைக்கு வாங்கிக்கொண்டு வந்ததாகப் பதிலளித்தான்.

பாடசாலை மாணவர்கள் கையில் இவை கிடைக்கக் கூடியதாக இருக்கிறதுஎன்பதற்கு இது ஒருசான்று. இது ஒரு வர்த்தகமாக நடத்தப்படுகிறது. ஆனல் இது வளர்ந்து வரும் ஒரு சமூகத்தை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பது பற்றி, இலாபமடைய விரும்புபவர்கள் சிறிதேனும் கவலைப்படுவதில்லை.

நான் இளைஞனுக இருந்த சமயத்தில் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற அருமையான புத்தகங்களே கைக்குக் கிடைத்தன, புத்தகக் கடைகளில் இவ்விதபுத்தகங்களே இருக்கும். அதனல் நல்ல புத்தகங்களைப் படித்து வளர்ச்சியடையக்கூடியதாக இருந்தது.

இப்போது தேவையற்ற விஷயங்களை, தேவையற்ற வயதில்இளைஞர்கள்தெரிந்து கொண்டுவிடுகிறார்கள். இதனைத் தடுக்கசட்டம் தன்னலான முயற்சிமுழுவதையும் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இளம் சமூகம் அழுக்காகிவிடும். இதனைத் துப்புரவு செய்வதில் பொலிஸாருக்கும் பெரும் பங்கு உண்டு. சட்டம்அவர்களுக்கு போதிய உதவி அளிக்க வேண்டும்.

அமெரிக்காவிலிருந்து இவ்வித தேவையற்ற 'குப்பைகள்' இங்கு பிரிட்டனில் சுங்கப்பகுதியினரின் கண்களுக்குத் தெரியா[illegible]டப்படுகின்றன. இவற்றை இங்கு கொண்டுவந்துசேர்ப்பவர்கள் நல்ல இலாபத்தை அடைகிறார்கள் என்பது உண்மைதான்.

இவ்வித ஆபாசப்புத்தகங்கள் சார்பாகவும் சிலர் வாதாடுகின்றனர். என்ன இருந்தாலும் கூடாதது கூடாததுதான். நல்லமுறையில் இல்லற வாழ்வு நடத்துவதற்கு இவை எந்தவிதத்திலும் உதவும் எனக்கூறிவிட முடியாது.

பிரிட்டிஷ்மகாராணி, அவரது கணவர் ஆகியோர் அலங்கோலமான முறையில் நிற்பதாக வர்ணிக்கப்பட்டு படங்கள் இங்கு (பிரிட்டனில்) விற்பனையாக்கப்பட்டுள்ளன. ஆனல் பொலிஸார் உண்மையில் இது அவர்களது படங்கள் அல்ல என்பதைக் கண்டு பிடித்து விட்டார்கள். மகாராணி, அவரதுகணவர் ஆகியோரது முகங்கள் கொண்ட படங்களை வெட்டி ஒட்டி இந்த வேலைகள் செய்யப்பட்டன. இவை எவ்வளவு கீழ்த்தரமான வேலைகள் என்பதை சற்று சிந்தியுங்கள்.

ஒழுங்கான வாழ்க்கை சீர்குலைவதற்கு இந்த ஆபாசப் படங்களும், புத்தகங்களும் ஒரு காரணம். இதனை நன்கு உணர்ந்து இதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு ஒரு

# 'பைத்தியம்!'

மேகலா

உண்மைக்கும், போலிக்கும் வேற்றுமை கண்டு கொள்ளமுடியாத இந்த உலகில் அரசு ஒரு 'பைத்தியம்'!

கலை, கலை என்று சொல்லிக்கொண்டே, அதற்காகவே தம்மை அணு அணுவாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் கலைப் பைத்தியங்களின் பெயர்களுடன் இந்த அரசுவின் பெயரையும் நிச்சயமாகச் சேர்த்துக் கொள்ளலாம்!



## கலைப்பைத்தியம்

சின்னவயதிலே இவருடன் ஒட்டிக்கொண்ட கலைப் பைத்தியம்தான் இவரை ஒன்றரை ரூபாய் காசுடன் பதினெட்டுவயதில் இந்தியாவுக்கு ஓடவைத்தது! மதுரை மீனுட்சி அம்மனின் சிற்ப வேலைகளில் அங்குஇவரை மயங்கவைத்து, சிற்பிகளுடன் சேர்ந்து உறவாட வைத்ததும் இந்தக் கலைப் பைத்தியம்தான்!

எந்த அரசுவைப் பற்றி கூறுகிறேன் என்று இனியும் மறைத்துவைத்தாலும், நீங்கள் புரிந்து கொண்டுவிடுவீர்கள். 1926-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்து, ஒன்றரைரூபாய் காசுடன் சொல்லாமல் கொள்ளாமல் இந்தியா சென்று, சிற்பக் கலைஞர்களுடன் சிறிது காலம் ஊசலாடி, அங்கு இராணுவத்தில் சேர்ந்து. கையில் துப்பாக்கி ஏந்தி, பகைவருடன் பொருதி, பின் யாழ்ப்பாணம் வந்து காமிராவை தொட்டு, நாடக உலகில் புகுந்து, நாடகத்துறையின் சகல கலை நுணுக்கங்களையும் அணு அணுவாக அனுபவப் படிப்பால் கற்றுத் தேர்ந்திருக்கும் நமது கலைஞர் எஸ். ரி. அரசுவைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

## டைரக்ட் செய்த முதல் நாடகம்

1950-ம் ஆண்டு 'இன்பக்கனவு' நாடகத்தை முதல் முதலாக அரசு டைரக்ட் செய்தார். முதல்நாடகமே இவருக்கு நல்ல வெற்றியைக் கொடுத்துவிட்டது!

'என்னை நாடக உலகத்துக்குக்கொண்டு வந்தவர் 'அடங்காப் பிடாரி' புகழ் வி. சீ. பரமானந்தன் தான்' என்று மிகவும் அடக்கமாக தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்ட அரசு, 'நாடக உலகத்தில் நான் பிரமாதமாக என்ன செய்துவிட்டேன்! என்னைப்பற்றிச் சொல்வதற்கு!' என்ருர்.

விட்டேனு? அரசு நடித்த நாடகங்களில் அவருக்குப பிடிததமானது 'நெஞ்சில் ஓர் ஆலயம்' நாடகத்தில் நோயாளி வேணுவாக நடித்த பாத்திரம் தான்! படம் வருவதற்கு முன்னுல் நடிக்கப்பட்ட இந்த நாடகத்தில் அரசுவின் வேணு பாத்திர நடிப்பு உச்சமென அப்போது பல பத்திரிகைகள் பாராட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இரு ஈழத்து படங்களில் அரசு

பேச்சை ஈழத்து சினிமாப் பக்கம் திருப்பினேன். அண்மையில் இலங்கையில்தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட 'கடமையின் எல்லை', 'டாக்ஸி டிரைவர்' இரு படங்களிலும் அரசு சம்பந்தப்பட்டிருக்கிருர். ஆனுல் தக்க முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள்.

'கடமையின் எல்லை' யில் நான் உதவி இயக்குனர் என்ற முறையில் தான் பணிபுரிய அமைக்கப்பட்டேன். ஆறு மூன்று 'செட்'டுகளுக்கு மட்டும்தான் நானிருந்தேன். எனது கருத்துக்களதையும் அந்தப்படத்தின் டைரக்டர் ஏற்றுக் கொள்ளவில்லை. கருத்து முரண்பாடு வரவே, அங்கிருந்து விலகிக்கொண்டு விட்டேன்'' என்று சொன்னவரிடம், 'ஏன் கடமையின் எல்லை'யில் 'சின்னப் பாத்திரமான அருவம் பாத்திரத்தை ஏற்று நடித்தீர்கள்! வேறு பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கலாமே?' என்றேன். அதற்கு அவர் தந்த விளக்கம் அருமையாகவிருந்தது.

## சின்னன் பெரிசு என்றில்லை

''சின்னப் பாத்திரம், பெரிய பாத்திரமென்று ஒன்றில்லை. எதைத்தந்தாலும் திறம்பட நடிப்பவன் தான் கலைஞன். கடமையின் எல்லையில் அந்த அருவம் பாத்திரத்தை ஏற்று நடிக்க ஒருவரும் முன்வரவில்லை. அதனுல் நான் ஏற்றேன்'' என்ருர்.

# நம்நாட்டு கலைஞர்

அரசுவின் 'அருவம்' நடிப்புப்பற்றி படம் திரையிட்டபோது ரசிகர்கள் பேசிக்கொண்டதிலிருந்து அவர் திறமைபற்றி இனியும் சொல்லவேண்டியதில்லை.

''டாக்ஸி டிரைவ''ரில் கடைசி நேரத்தில்தான் அழைத்திருந்தார்கள். சின்னப் பாத்திரம்தான், நடித்தேன்' என்ருர். 'டாக்ஸி டிரை'வரில் அரசு நடித்த 'இலட்சியவாதி' பாத்திரம் ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம்.

## அரசு ஒரு பைத்தியம்

ஈழத்தில் தமிழ் நாடகக்கலைவளர்வதற்கு அரசு தெரிவித்த யோசனைகள் வரவேற்கக்கூடியதாகவிருந்தன. நாடகக்கலை சம்பந்தமாக வகுப்புகள் வைக்கவேண்டும்; அதில் நாடகத்துறையில் சம்பந்தப்பட்டசகலரும் கலந்து கொள்ளவேண்டும். அத்துடன் நாடகங்களை மேடையேற்றுவதற்கு முன் 'சென்ஸர் போர்ட்'க்கு முன்னுல் மேடையேற்றி, அவர்களின் சென்ஸாருக்குப் பின்னுல் மேடையேற்றினுல் நல்ல தரமான நாடகங்களை எதிர்பார்க்கலாம்'' என்ருர்,

வெளிநாடொன்றில் நடந்த நாடகமொன்றைப்பற்றி உதாரணமாக அரசு கூறியது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. ''அந்த நாடகம் கதையின்படி முழுக்க முழுக்க இரவில்தான் நடந்தது. ஆனுல்நாடகம் 'பளிச்' என்ற வெளிச்சத்தில்தான் மேடையேற்றப்பட்டது. நடித்தவர்கள் சரியான கடும் இரவில் எப்படி இருப்பார்கள், உலாவுவார்கள் என்பதை மிகவும் அந்த வெளிச்சத்தில் வெளிக்காட்டினுர்கள். இதுதான் நாடகம்! இதுதான் கலை நுணுக்கம்'' என்ருர் அரசு.

மொத்தத்தில் சொல்லப்போனுல் அரசு ஒரு கலைப் பைத்தியம்!'

# கலை அரங்கம்

ஆடற் தெய்வத்துக்கு 'கலைக்கோயில்' அமைத்து பரதக்கலைக்கு பணி செய்துகொண்டிருப்பவர்தான் இந்தச் சலங்கை கொஞ்சும் கலைக்குமரி லீலாம்பிகை!



# சதங்கை கொஞ்சும் கலைமங்கை

பதினைந்து வயதில் பாரதம்சென்றுபரதக்கலையை முறைப்படி பயின்ருர். தமிழ்நாடு கலாக்ஷேத்திரத்தில் ஐந்து வருடம் படித்து, நாட்டியக்கலையில் 'டிப்ளோமா' பட்டம் பெற்று, இலங்கைதிரும்பினுர்.

## யாழ். நகர் பூரித்தது

1961-ம் ஆண்டு செப்டம்பர் 16 —

யாழ்ப்பாணம்தனக்குக் கிடைத்துவிட்ட இளமையும், அழகும், கவர்ச்சியும் கொண்ட ஒரு பரதக்குமரிக்காக பெருமையும் பூரிப்பும் கொள்ள நிச்சயம் மறந்திருக்க மாட்டாது! அன்றுதான் யாழ். நகரமண்டபத்தில் 'லீலா'வின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தது. முதல் ஆட்டமே சிறப்பாகஇருந்தது, இவரது எதிர்கால வெற்றிக்கு நல்லவிதமாக அமைந்துவிட்டது. இதற்குப் பிறகு பல மேடைகளில் ஆடினுர், ஆடினுர் ... தங்கப்பதக்கங்கள் இவர் திறமைக்குச் சான்ருக வழங்கப்பட்டன. சாதாரணரசிகன்தொடக்கம், அரசாங்க அதிபர், அமைச்சர் வரை பாராட்டினுர்கள். 'லீலா'வின் முறைதவருது, சாஸ்திரம் தவருது, சம்பிரதாயம் தவருது, ஆடிய ஆட்டத்தை!

## அமைச்சர் சில்வா பாராட்டினுர்!

வடபகுதி ஐக்கிய மேற்பார்வையாளர் சபையின் ஆதரவில் 1965-ம்ஆண்டு நடைபெற்ற கூட்டுறவாளர் தினவிழாவில் இவர் ஆடிய ஆட்டம் விழாவில் கலந்து கொண்ட காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவை பெரிதும் கவர்ந்துவிட்டது. ''இவரைப்போன்ற நடன தாரகைகள் ஒரு சிலர்தான்'' என்றுமந்திரி கூறினுராம். மறக்கமுடியாத நிகழ்ச்சிகளில் இவர் மனதில் இதுவுமொன்ருக நிலைத்துவிட்டது.

## கலைபற்றி பேசினுல் விடமாட்டார்

பரதக்கலையுடன் அவர் சங்கமமாகி விட்டாரென்றதற்கு, அந்தக்கலைபற்றி எனக்கு அவர் தந்தநீண்ட விளக்கங்களிலிருந்து உணரக் கூடியதாகவிருந்தது. நாட்டியக் கலையைப்பற்றிப் பேசத்தொடங்கினுல் இந்த லீலாம்பிகைவிடமாட்டார் என்கிற அளவுக்கு அருமையான விளக்கங்கள் தந்தார்.

கண்டி ஹான்வென்டில் பத்துவயதுச் சிறுமியாக இருக்கும்போது தனக்கு நடனம் சொல்லித்தந்த முதல் நடனகு... திருமதி நிரஞ்ச... பற்றி என்னிடம்... பிட்ட 'லீலா' அ... ஓரியன்டல் நட... பலவற்றைக்... கொண்டதாகச்... னுர்.

## பல்கலை பயின்...

தமிழ்நாடு கல... திரத்தில் இவர் ... காலம் முடிந்தது... கேயே நடன... யாக இருக்கும்ப... டார்களாம். ''... என் தாய் நா... நான் கற்ற க... பரப்ப வேண்டும்... நோக்கமே என்... பணியாற்ற வி... தடுத்தது'' என்...

...னுர். இவர் கலா... ரத்தில் பரதநா... மட்டுமல்ல, ... சாஸ்திரம், (Da... ry) கிராமிய நட... பயின்றிருக்கிருர்... துடன் ...யும்... கொ...

196... ஆண்... நகரமண்டபத்தி... மணிநேர தன... நாட்டியக் கச்... பெரியளவு ...

★ யார் வரவுக்காக . . .



தளிர்க் கொடியாள் வாணிஸ்ரீ துவண்டுகொண்டு புத்தகத்தில க... ஏங்கித் தவித்துக்கொண்டிருப்பது யாருக்காகவோ? உமையாள் பி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...சம்

நடனகுருவான
நிரஞ்சனாதேவி
...ன்னிடம் குறிப்
'லீலா' அவரிடம்
...ல் நடனங்கள்
...ற்றைக் கற்றுக்
...டதாகச் சொன்

...பயின்றவர்

...டு கலாக்ஷேத்
...ல் இவர் பயிற்சிக்
முடிந்ததும், அங்
நடனஆசிரியை
...ருக்கும்படி கேட்
...ாம். ''ஈழத்தில்
...ாய் நாட்டுக்கு
கற்ற கலையைப்
வேண்டும் என்ற
...மே என்னை அங்கு
...ற்ற விடாமல்
...து'' என்று கூறி

...வர் கலாக்ஷேத்தி
பரதநாட்டியம்
...ல்ல, நாட்டிய
...ரம், (Dance Theo
...மிய நடனங்கள்
...ிருக்கிறார். அத்
...ையும் கற்றுக்

...ஆண்டு யாழ்
...ண்டபத்தில் மூன்று
...நர தனது பரத
...யக் கச்சேரியை
...ளவு செலவில்

நடாத்தி வெற்றியும் கண்டிருக்கிறார்.

## கலைக்கோவில் அமைத்தார்

இவருக்கு ஆடற்கலையின் மேலுள்ள பற்று, ஒரு கல்லூரியை நிறுவும் அளவுக்கே கொண்டு போய் விட்டது. மானிப்பாயில் 'கலைக்கோயில்' என்ற பெயருடன் நடனக்கல்லூரியொன்றை நிறுவி, ஆடற்கலைக்கு சேவை செய்துவருகிறார். நிறைய ளவு மாணவிகள் பயிலும் இக்கல்லூரியில், தொண்டமனாறு, மல்லாகம், வட்டுக்கோட்டை இன்னும் பல இடங்களைச் சேர்ந்தவர்களும் பயில்கிறார்கள். அப்போது அரசாங்க அதிபராக இருந்த திரு. நெவில்ஜெயவீராதலைமையில் 'கலைக்கோவில்'' மாணவிகளின் வருடாந்த விழாவை அருமையான முறையில் தனித்து நின்று நடாத்தினர், இந்தக்கலைக் குமரி.

இவரது 'கலைக்கோவில்' மாணவிகளின் நடனம் பண்டைத்தரிப்பு, கிளிநொச்சி, அளவெட்டி, உடுப்பிட்டி, தெல்லிப்பழை, நவாலி, மானிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் முதலியபலஇடங்களில் நடந்திருக்கிறது. பலரும்பாராட்டினார்கள்,

## பாமா ராஜகோபால்

சின்னப் பிள்ளைகளைகளை லீலாம்பிகை எப்படிப் பழக்கியெடுத்திருக்கிறாரென்று!

## ஆசைகள் பல; அதில் ஒன்று!

தன்னிதயத்தில் முடங்கிக் கிடக்கும் ஆசைகள் சிலவற்றை என்னிடம் அவர் வெளியிட்டார். ''நாட்டிய நாடகங்களை நல்லமுறையில் உருவாக்கி மேடையேற்ற வேண்டுமென்பது எனது பல ஆசைகளில் ஒன்று'' என்றார். நாட்டியக் கலையில் 'என்னென்னவோ' எல்லாம் செய்யும் அவருக்கு இது ஒரு பிரமாதமான வேலையா?

''ஈழத்தில் சமீபகாலத்தில் நடனக்கலை வளர்ச்சியடைந்திருக்கிறது எனினும், எல்லாவிதமக்களும் அதன் உயர்வான புனிதத் தன்மையை உணர்ந்திருக்கிறார்களா என்பது சந்தேகம். ஈழத்தில்நாட்டியக்கலை மென்மேலும் வளர்ந்து சிறப்புற்று விளங்க வேண்டும் என்பதற்காக நடராஜப்பெருமானை வேண்டுகிறேன்'' என்று பெருமூச்சுடனே ஒரு தனது சின்ன 'லெக்ஷரை' முடித்தார்.

## கலை! கலை! கலை! கலை!

பரதநாட்டியக் கலைகளில் இவருக்கு மிகவும் பிடித்தது வர்ணம். நாட்டியக் கலைக்கு இவருக்கு வேண்டியதை சளைக்காது செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார் இவர் அருமைத் தந்தைகந்தையா.

சிரிக்கும்போது, பேசும் போது, ஆடும் போது ஏன் இவரின் ஒவ்வொரு அங்கஅசைவிலும் காணக்கூடிய தொன்று கலை, கலை, கலை தான்! ஆம், இவர்சலங்கை கொஞ்சும் கலைக்குமரிதான்!!

# வாஹினியில் நான்!

★ எம். ஜி. ஆரை சந்தித்தேன்

**1965-ம்** ஆண்டு சென்னைக்குச் சென்றேன். திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய உதவியை நாடுவதென்றுதீர்மானித்தேன். எனது நாடகநடிக நண்பர்கள் இதற்காக ஒரு கூட்டம் வைத்தனர். அன்று எங்களுடைய கலையரசு நாடக அரங்கத்தின் நாடகம் நடைபெற்றது. அதற்கு பல நாடக மன்றங்களை அழைத்திருந்தோம். எல்லா நாடக மன்றங்களும் சேர்ந்து, எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு திரு. எம். ஜி. ஆர். அவர்கட்கு எழுதிய கடிதத்தில் கைச்சாத்திட்டன. நாடகமன்றங்கள், தனிப்பட்ட கலைஞர்கள், எம். ஜி. ஆர். அவர்களைத் தெரிந்த பெரியோர்கள், இப்படியாக நாற்பது பெயர்களுடைய கைச்சாத்துக்கள் அதில் அடங்கியிருந்தன. அதை எடுத்துக்கொண்டு நம்பிக்கையுடன் இந்தியா சென்றேன்.

சென்னையை அடைந்த அன்றே எம். ஜி. ஆர். இல்லத்திற்குச் சென்றேன். அவர் 'அன்பே வா' வெளிப்புறக் காட்சிக்காகச் சிம்லா சென்றுவிட்டதாகவும் திரும்பி வர மூன்று நான்கு நாட்களாகுமென்றும் கூறினர். மூன்று நாட்கள் கழித்துப் போனேன். சிம்லாவிலிருந்து வந்துவிட்டதாகவும் ஆனல் வெளியே போய்விட்டார் என்றும் கூறினர்கள். காலை ஆறரைமணிக்குள் வந்தால்தான் பார்க்க முடியும் என்பதைத் தெரிந்து கொண்டேன். அடுத்தநாட்காலை ஆறு மணிக்கெல்லாம் அவர் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். திரு. திருப்பதிசாமி என்பவர் என்னை அழைத்துச்சென்று விருந்தினர் மண்டபத்தில்அமர வைத்தார்.

பத்து நிமிடங்கள் கழித்து எம். ஜி. ஆர். அவர்கள் என்னைத் தமது அறைக்கு அழைப்பதாக



ஒருவர் வந்து சொல்லி என்னை அவர் அறைக்கு அழைத்துச்சென்றார்.

## நமது கலைஞர் அருமை நாயகம் தனது அனுபவங்களை எழுதுகிறார்

அவருடைய அறைக்குச் சென்றதும் சிரித்தமுகத்தோடுவரவேற்றுப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார். அவர் சிரித்த முகத்தைக்கண்டதும் ''சிவாஜி கணேசன் சிரிப்பில் கவர்ச்சி அதிகம், எம்.ஜி. ஆரின் சிரிப்பில் குளிர்ச்சி அதிகம்'' என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் எப்போதோ எழுதியிருந்தது எனக்கு ஞாபகம் வந்தது.

சிறிது நேர உரையாடலின் பின்னர் நான்கு நாட்கள் கழித்து வந்து பார்க்கச் சொன்னார்.

எம். ஜி. ஆர். அவர்கள் கூறியபடி மூன்று நாட்கள் கழித்துத் திரும்பவும் அவரை சந்தித்தேன். மறுநாள் காலை தனக்கு ''போன்'' செய்யும்படி கூறி தனது அந்தரங்க ''போன்'' நம்பரைக் கொடுத்தார். அடுத்த நாட்காலையில் ''போன்'' செய்து எம்.ஜி. ஆர். இருக்கிறாரா? என்றேன். ''நான்தான் பேசுகிறேன்'' என்று பதில் கொடுத்தார்.

(இன்னும் வரும்)

## ★ குண்டுக்கும் அஞ்சாத புரட்சி நடிகர்!



சினிமா உலகில் மட்டுமல்ல, நிஜவாழ்க்கையிலும் இவர் ஒரு புரட்சிதான்! 'துப்பாக்கிக் குண்டுதான் என்னைத் துளைத்தாலும் அஞ்சேன், எதிர்த்து நின்று வாழ்ந்து காட்டுவேன்' என்று சொல்லுவது போல தனக்கேற்பட்ட பேராபத்திலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறார்! துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பிறகு கழுத்தில் பிளாஸ்ரர் போட்ட நிலையில் எழுந்து உட்கார்ந்து தன்னைக் காணவந்தவர்களுக்கு இப்படி வணக்கம் தெரிவிக்கிறார். சினிமா உலகில் புரட்சி பல செய்த இவர் பரங்கிமலைத் தொகுதியின் முடிசூடா மன்னனாகத்தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பரங்கிமலையிலும் அவர் இனி புரட்சி பல செய்வாரென்று சொல்லவாவேண்டும்? —'மே



காரைநகரில் சமீபத்தில் செல்வன் தி. சண்முகசுந்தரத்தின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. இங்கு அவர் மிருதங்கம் வாசிப்பதைக் காணலாம்.

## ஜெயகாந்தன் எடுத்த செய்திப்படம்

'யாருக்காக அழுதான்' படத்தை எடுத்த எழுத்தாளர் ஜெயகாந்தன் இப்போது [illegible] படத்தை எடுத்து முடித்திருக்கிறார். இந்தப் படத்திற்கு 'நேற்று, இன்று, நாளை' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்திப்படம் அரசாங்கத்தின் திட்டசாதனைகளை விளக்கக்கூடியதாகவிருக்கிறது.



...கத்தில கவனத்தை செலுத்தாது எங்கி...
...மயாள் பிலிம்ஸாரின் படத்திற்காகத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநள்ளாறு சனீஸ்வரன் கோவில்

— என். இராமகிருஷ்ண —



தென்னாட்டில் பிரசித்தி பெற்ற திருநள்ளாற்றில் உள்ள சனீஸ்வர பகவானின்தோற்றத்தைப்படத்தில் காணலாம். சனீஸ்வரருக்கு புறம்பானதொரு சந்நிதி அமைத்து வழிபடுவது இங்குதான்.

பாடல்பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாய் விளங்கும் திருநள்ளாறு ஸ்ரீ தெர்ப்பாரண்யேஸ்வரசுவாமி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு இவ்வாலயத்தின் வரலாற்றிலேயே முதற்தடவையாக சென்ற ஆண்டுக் கடைசியில் கோடி அர்ச்சனை நடைபெற்றது. பக்த கோடிகளின் வேண்டுகோளுக்கிணங்கஇவ்வர்ச்சனை பராபவ ஆண்டு கார்த்திகைத்திங்கள் 15-ம் நாள் நடைபெற்றது. சனீஸ்வர பகவானுக்குப்புறம்பாக தனித்தொரு சந்நிதி அமைத்து வழிபடுவது திருநள்ளாற்றில் மட்டும்தான். நவக்கிரகங்களில் இதர எட்டுக் கிரகங்களின் வடிவங்களை திருநள்ளாற்றில் காண முடியாது. திருநள்ளாறு சுவாமி - தர்ப்பணேஸ்வரர், தேவி -பிராணேஸ்வரி. முசுகுந்த சக்கரவர்த்தி தேவேந்திரனிடம்பெற்ற ஏழு லிங்கங்களில் ஒன்று இங்கு நிறுவப்பட்டமையால் திருநள்ளாறு சப்த விடங்கக்ஷேத்திரமாகவும் விளங்குகிறது. தியாகராஜர் சந்நிதியும் இங்கு புறம்பாகவே உண்டு. இங்கு கோவில்கொண்டுள்ள விடங்கர் நாகவிடங்கர், அவர் நிருத்தம் உன்மத்த நடனம். தியாகராஜர் தேவி நீலோற்பலாம்பாள். இரத்தினக் கல்லால் ஆன மரகத லிங்கம் தியாகராஜர் மண்டபத்தில் ஒரு பேழைக்குள் வைத்து பக்தகோடிகளுக்குக் காண்பிக்கப்படுகிறது. திருநள்ளாற்றில் சிறப்பு முக்கியம் உடைய தீர்த்தம் நளதீர்த்தம் ஆகும்.

நளமகாராசனை தேவர்கள் சனீஸ்வரன் துணையுடனே பல இன்னல்களுக்குட்படுத்திய போதும் தமயந்தி தேவர்களில் யாரையும் தன் நாயகனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாயும் நளன் ஈற்றில் திருநள்ளாறு தெர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட்டே சனீஸ்வரனின் பிணைப்பிலிருந்து தன்னைவிடுவித்துக் கொண்டதாயும், அதன்பின் சனீஸ்வரபகவான் நளனுடைய பெயரைச் சொல்லும் எவரையும் அணுகுவதில்லை என வாக்களித்துக் கொண்டு நளனை விட்டுவிலகியது இங்குதான் எனவும் புராண வரலாறு கூறுவார்கள்.

இரண்டரை ஆண்டுகளுக்கொருதடவை நிகழும் சனிப்பெயர்ச்சி தினத்தன்று நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கானோர் இங்கு கூடி நளதீர்த்தத்தில் எண்ணை நீராடி வேதியர்க்கு எள்தானம் வழங்கி சனீஸ்வரன் சந்நிதியில் எண்ணை விளக்கேற்றி சனீஸ்வர சாந்திவேண்டி வழிபடுவர். அடுத்த சனிப் பெயர்ச்சி சனி கும்பராசியிலிருந்து மீன ராசிக்கு மாறும் 10-3-67.ல் வருகின்றது.

கோவிலின் கர்ப்பக்கிரக விக்கிரகம் சில ஆண்டுகளுக்குமுன் தங்கக்கவசம் அணியப்பெற்றிருக்கிறது. சனீஸ்வர பகவானின் வாகனம் காகமாதலால் உற்சவங்களின்போது வெள்ளிக்காக வாகனத்தில் சுவாமி வெளி உலாவருவார். பிரமோற்சவம் வைகாசி மாதத்தில் நடைபெறும். கோவிலின்

(10-ம் பக்கம் பார்க்க)

# வலி.வடக்கு ஆசிரியர்சங்க . .

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்கள்: எஸ்.சிவபாலன் (மகாஜனா), ஆர். இராசவரோதயம் (ஸ்கந்தா), எஸ். சுரேஷ்குமார் (யூனியன்)..

மத்தியபிரிவு, பெண்கள்: எஸ். சுகுணராணி (யூனியன்), எஸ். ஜெயகௌரி (யூனியன்), ஜி. பிரேமிளா (மகாஜனா).

ஆண்கள்: ஜி. கே. யேசுதாசன் (ஸ்கந்தா), வி. எம், அரியநாயகம் (சென்ற் ஹென்ரி), எஸ். சுகுமார் (மகாஜனா).

மேற்பிரிவு, பெண்கள்: எஸ். செந்தில்குமாரி (மகாஜனா), வி. சாரதா (மகாஜனா), எஸ். லலிதா (யூனியன்).

ஆண்கள்: ஆர். சுகுணசபேசன் (மகாஜனா), ஈ.எம். குமார் (மகாஜனா), எஸ். விக்னேஸ்வரன் (ஸ்கந்தா).

அதிமேற்பிரிவு, பெண்கள்: ஆர், ராஜபதி (மகாஜனா), ரி. மங்கையர்க்கரசி (மகாஜனா).

ஆண்கள்: எஸ். ஆர். கேதீஸ்வரன் (மகாஜனா), என். ஜகநாதன் மகாஜனா), எஸ். ஈ. எவ். சேவியர் (மகாஜனா).

சங்கீதப்போட்டி, தனித்துப் பாடல்: கீழ்ப் பிரிவு; ஆண்கள்: எஸ். சிவஞானராசா (அருணோதயா), கே. அருட்சோதி (ஸ்கந்தா), எஸ். சிவராஜகுமார் (ஸ்கந்தா).

பெண்கள்; கே. தியாகேஸ்வரி (ஸ்கந்தா), எஸ்.வசந்தி (யூனியன்), வி. ஸ்ரீரங்கநாயகி (அருணோதயா).

மேற்பிரிவு, ஆண்கள்: எஸ் சண்முகராகவன் (ஸ்கந்தா), பி. சுபாஸ்சந்திரன் (ஸ்கந்தா), வி. சிவானந்தராசா (ஸ்கந்தா), வி. சிவஞானசேகரன் (அருணோதயா).

பெண்கள் எஸ் கலாநிதி (அருணோதயா), ரி. கௌதமி (அருணோதயா), எஸ். கமலாதேவி (யூனியன்).

குழுவாகப் பாடல், கீழ்ப் பிரிவு: ஆண்கள்; அருணோதயா, ஸ்கந்தா.

பெண்கள்: அருணோதயா, ஸ்கந்தா.

மேற்பிரிவு; ஆண்கள்: ஸ்கந்தா.

பெண்கள்: மகாஜனா, அருணோதயா, ஸ்கந்தா.







விதை பாதுகாப்பு செரசான்
மரக்கறி விதைகளை பீடிக்கக்கூடிய விதை மூலம் பூஞ்சண வியாதிகளுக்கான பரிகாரம் விதை பாதுகாப்பிற்கு செரசான் மிக சிறந்தது.



மட்டாசில
இலைகளை நன்று பாழாக்கும் கம்பளிப்பூச்சி, அறக்கொட்டியான் ஆகியவற்றை ஒழித்துக்கட்டுவதற்கென பிரத்தியேகமாக கலவை செய்யப்பட்ட தெளிப்பு மட்டாசில். எவ்வித மரக்கறி வகைகளிலும் பாதிக்கும் பூச்சிகளை மிக திறமாக ஒழித்து கட்டக்கூடியதென நிரூபிக்கப்பட்டதொன்றாகும்.



மெட்டசிஸ்டொக்ஸ் "ஆர்"
மரக்கறி வகைகளை தாக்கும் எவ்வித குருத்து உறிஞ்சும் பூச்சி வகைகளான திரிப்ஸ், பேன், அழுக்கணவன், வெண் ஈ, தண்டு குத்தி, போஞ்சி ஈ ஆகியவற்றைஅழிக்கும் அத்துடன் மிளகாயில் பரவும் குருமண் நோய். இலை சுருள் பரவவிடாது கட்டுப்படுத்தும் வல்லமை வாய்ந்தது.

போலித்தியோன், போலிடோல், டிப்ரெக்ஸ்
உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், தக்காளி, போஞ்சி, மிளகாய் போன்ற மரக்கறி விருட்சங்களை பாதிக்கும் புழு-பேன், பூச்சிகளை ஒழித்துக்கட்டுவதற்கு தெளிக்கப்படும் ஒன்று ... கிருமிநாசினி.



கோவா, போஞ்சி, மிளகாய், தக்காளி, கத்தரி, வெண்டி, வெங்காயம் ஆகிய மரக்கறி விருட்சங்களில் காணப்படும் பலதரப்பட்ட பூச்சிகளை கட்டுப்படுத்தும் மிக வல்லமை வாய்ந்த சர்வ கிருமிநாசினி.
மரக்கறி பூச்சிகளான இலை அருவி, அறக்கொட்டியான், கம்பளிப்புழு ஆகிய மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்த சிறந்தது.



குப்ராவிட்
மரக்கறி விருட்சங்களில் ஏற்படும் பூஞ்சண வியாதிகளை கட்டுப்படுத்த ஓர் தெளிப்பு மருந்து. தெளிக்கப்பட்டவிடம் பூராவிலும் தொடர்ந்து செயல்படக்கூடிய தன்மை வாய்ந்தது. குப்ராவிட் செடிகளுக்கு நல்ல செழிப்பையும், கொடிகள் நேர்த்தியாக தொங்கும் தன்மையையும் அளிக்கிறது.



லேபசிட் ஈ. சி.
புடோல், கத்தரி, பாவை, மா, தோடை, எலுமிச்சை முக்கியமாக மாதளம்பழம் போன்ற விருட்சங்களை பாதிக்கும் பல ஈக்களை கட்டுப்படுத்தும் கூடுதல் சக்திவாய்ந்த கிருமி நாசினி. பழவர்க்கங்களிலும் ஊடுருவி சென்று நாசப்படுத்துவதையும் கட்டுப்படுத்துகிறது.



எமது விவசாய இரசாயன பகுதி நவீன முறைகளில் விவசாய இரசாயனப் பொருள் உபயோக முறைகளை செயல் முறைகளில் விரும்பும் கமக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் போதனைகளுடன் செய்து காட்டி உதவி புரிய எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
றோயல் டிஸ்பென்சரி,
270, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

HAYLEYS

விவசாய இரசாயனப் பொருளாளர்,
ஹேலீஸ் லிமிட்டட்
(விவசாய இரசாயன பகுதி)
தபால் பெட்டி 70, 400, டீன்ஸ் ரோட் கொழும்பு-10.

BAYER

தொலைபேசி: 96333

Vision-HL-16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உலகம்

## ஏமாந்த நரி

— மாஸ்டர் —

வவனியாவில் தனி ஒரு பகுதியில் வேலாயுதம் தன்னந்தனியனுக கமம் செய்து வந்தான். அவன் கமம் செய்துவந்த பகுதி காட்டுப்பிரதேசமாகும். அதனுல் மிருகங்களிடம் இருந்து பயிர்களைக் காப்பாற்றுவது மிக்க கடினமாக இருந்தது.

நரி ஒன்று வேலாயுதத்திற்கு ஓயாத தொல்லை கொடுத்துவந்தது.

வேண்டுமென்றே அது தொல்லை கொடுத்தது. தன் சகாக்களின் உதவியுடன் அவனது கமத்தை அது அழிக்கும். காட்டைஅழித்துவிட்டதால் அவன் மீது அவற்றிற்குக் கோபம்.

ஒரு நாள் அவன்தன்கமத்தில் மரவள்ளித்தடிகளை நாட்டியவண்ணம் இருந்தான். அப்போது நரி அங்கு வந்தது. நரியைக்கண்டதும் வேலாயுதத்திற்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. தான் கஷ்டப்பட்டு நட்டும் மரவள்ளித்தடிகளையும் அது அழித்துவிடுமோ என்று தான் அவன் பயந்தான்.

''நான் உன்னுடன் ஒப்பந்தம் ஒன்று செய்கிறேன். தயவுசெய்துபயிர்களை நாசம் செய்யாதே'' என்ருன் வேலாயுதம், நரியைப் பார்த்து.

நரி, என்ன ஒப்பந்தம் என்று கேட்டது.

''இந்த மரவள்ளித்தடிகளையொன்றும் செய்யாதே. இது வளர்ந்தபின், மேற்பகுதி எல்லாம் உனக்குத் தந்துவிடுகிறேன்'' என்ருன் வேலாயுதம்.

ஒருநாள்எதிர்பாராதுஒரு, வரையொருவர்சந்தித்தனர்.

''ஏய்! நீ என்னை ஏமாற்றிவிட்டாய்... சரி... சரி... உன்னை நான் என்னசெய்கிறேன் பார்... மறுமுறை உன் கமப்பக்கம் வருவதை நான் பார்க்கிறேன்'' என்றது நரி.

நெல்விதைப்பதற்கு வேலாயுதம் காட்டுக்குச் சென்ருன். அவன் நிலத்தைப்பண்படுத்தி, நெல்லை விதைத்துக்கொண்டிருந்தான். நரி அவனிடம் வந்து ஏளனத்துடன் சிரித்தது.

''தயவு செய்து பயிர் வளர்ந்ததும் நாசம் செய்துவிடாதே. நான் உன்னுடன் ஒருஒப்பந்தம் செய்யப்போகிறேன்'' என்ருன் வேலாயுதம். நரி அவனைப்பார்த்து முறைத்தது.

''உனது ஒப்பந்தம் வேண்டாம். நான் சொல்வது போல் நீ நடக்கவேண்டும்'' என்றது நரி. வேலாயுதமும் சரி என்ருன்.

''இம்முறை நிலத்தின் கீழுள்ள பகுதிமுழுவதும் எனக்குத்தான். அதுவும் நான்தான்கிளறிஎடுப்பேன்' என்றது நரி. சரி என்ருன் வேலாயுதம்.

நெல் வெட்டும் சமயம். நரி வந்தது. மறுமுறையும் நரிக்கு ஏமாற்றமே. வேலாதயும் நெற்பயிர்களை முன்னமேவெட்டிஏற்றிக்கொண்டுபோய்விட்டான்! அது நிலத்தைத் தோண்டிப் பார்த்தபோது நெல்லின் வேர்தான் அதற்குக்கிடைத்தது.

ஒருநாள் வேலாயுதம் மரவள்ளிக்கிழங்குகளைப் பிடுங்கியவண்ணமிருந்தான். அப்போது நரி அவ்விடம் வந்தது. அவன் ஒப்பந்தம் செய்தவண்ணம், நரிக்கு மேற்பகுதியைக் கொடுத்துவிட்டு, வீட்டிற்குப்போய் விட்டான் வேலாயுதம். நரி இலைகளையும் தண்டுகளையும் சுவைத்துப்பார்த்தது. வேலாயுதம் தன்னை ஏய்த்துவிட்டதாகக் கோபப்பட்டது.

### சரிபார்த்தேன்!

ஆசிரியர்: நீ அவனுடைய பேப்பரைப் பார்த்துத்தானே காப்பியடித்தாய்?

மாணவன்: இல்லை சார்! நான் எழுதிய விடைகளை சரியாக அவன் எழுதியிருக்கிருனு என்று சரிபார்த்துக் கொண்டிருந்தேன்!

## உடன் சிகிச்சை

ஆசிரியர்: மனித உடல் நீரில் மூழ்கியதும் என்ன நேரிடுகிறது?

மாணவன்: உடனே 'ஆம்புலன்ஸுக்கு' டெலிபோன்செய்யப்படுகிறது.

## அருமைத் தம்பி தங்கைகளே

சிறுவர் உலகத்தைப் பாராட்டி எழுதியவர்க்கெல்லாம் என் நன்றி. தனித்தனி நன்றி கூருததற்காக அண்ணு மீது கோபிக்கக் கூடாது.

பாட்மின்டன், பாட்மின்டன் என்று சொல்வீர்களே அதன் வரலாறு உங்களுக்குத் தெரியுமா? 'பாமி' சுருக்கமாக உங்களுக்குவிளங்க வைக்கிருர்.

வானம் இருண்டு வாடை மழை பொழிகையில் எல்லா உயிரினங்களுமே ஒதுங்கி யிருக்க மயில் மட்டும் தன் தோகைவிரித்து 'ஆடுவது ஏன்' என்ற துரையரின் கவிதையும் வாழ்வுக்கும் மலருக்கும் உள்ள ஒற்றுமையை உணர்த்தும் த. அப்புத்துரையின் பாட்டும் இம்முறை கவிதை விருந்து.

நரியின் புத்திக் கூர்மையை நீங்கள் நன்கு அறிவீர்கள். அப்படியான ஒரு நரி முதல் தடவையாக ஏமாந்திருக்கிறது, மாஸ்டரின்' கதையில்.

### அடுத்த வாரம்

புதிய தொடர்கதை ஆரம்பம், படிக்கத் தவருதீர்கள். இது ஒரு புதிய முறை.

மூளைக்கு விருந்து பகுதிக்கு ஏராளமான 'கார்டு' கள் வந்து கொண்டிருக்கின்றன. சரியான விடை அனுப்பியவர்களை அடுத்த வாரம் 'சிறுவர் உலகத்தில்' சந்திப்பீர்கள்.

### உங்கள் கவனத்திற்கு

சிறுவர்களுக்கேற்ற கவிதைகள், கதைகள், கட்டுரைகள், பெரியார் வரலாறுகள், அதிசய தகவல்கள், நொடித்துணுக்குகள், விகடத்துணுக்குகள், தொடர்கதைகள் சிறுவர் உலகத்துக்கு வரவேற்கப் படுகின்றன. தரமானவை பிரசுரிக்கப்படும்.

'பூல்ஸ்காப்' தாளில்எழுதப்படுவது விரும்பத்தக்கது. தாளின் ஒருபக்கத்திலேயே எழுத வேண்டும். எழுதும் தம்பி, தங்கைகள் தமது சொந்தப் பெயர், முழுவிலாசம் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடத்தவறக்கூடாது

அண்ணு

### ஒரேவழி

பாடகர் கற்றுக்கொள்பவன் பாடு ஆசிரியரிடம்: சார்! நான் பாடும் போதெல்லாம் என் கண்களிலிருந்து தாரைதாரையாக கண்ணீர் வருகிறது. நிறுத்தஏதாவது வழியுண்டா?

ஆசிரியர்: உன்னுடைய காதுகளில் பஞ்சு வைத்து நன்ருக அடைத்துக்கொள். பிறகு சரியாகிவிடும்.

## மலரும் வாழ்வும்

பூத்த மலர் சிரிக்குது
பார்த்த மனம் பறிக்குது
ஏத்திக் கூந்தல் மீதிலே
சார்த்தி இன்பம் பெருகுது.

○

வண்டினங்கள் வருகுது
உண்டு மலரில் உறங்குது
கண்ணை மயக்கும் கங்குலுள்
வண்மை சாய்ந்து காயுது.

○

புதிய மலர்கள் யாவுமே
பொழுது மறைய வாடல்போல்
இதயம் வாழும் எண்ணமும்
இனி ஒருகால்மடியுமே.

○

வாழ்க்கை வனத்தில் யாவுமே
வருதல் இயற்கை நியதியே
வதைக்கும் மனதை உறுதியால்
வளம் படுத்த முயலுவீர்.

○

எவை மடிந்த போதிலும்
இன்னும் முகை அரும்புமே
சுவை குறைந்த போதிலும்
சுகம் பிறந்து வளருமே.

○

வகுக்கும் வாழ்க்கைப் பாதையை
வழி நிமிர்ந்த தாகவே
தொகுத்த நல்ல மாலையாய்
தூண்டல் நம் கடமையே.

— த. அப்புத்துரை

## ஆடுவது ஏன்?

வண்ண உடல் மயிலே—எங்கள்
வார்த்தை ஒன்று கேட்பாய்
எண்ணிப் பதில் உரைப்பாய்—மயிலே
எங்கள் மனம் நிறைய.

ஃ

வானம் இருண் டிருக்க—நல்ல
வாடை மழை பொழிய
கானப் பறவை எல்லாம்—குளிரில்
கலங்கி நடுங் கினவே.

ஃ

நரியும் நாய்க ளும்மே—மழையில்
நனைந்து விறைத் தொதுங்க
பரியும் பசுக்க ளும்மே—நடுங்கி
பற்றையில் ஒதுங் கினவே.

ஃ

மானும் மரை களுமே—குளிரை
மறைக்க ஓடு கையில்
கான மயிலே நீதான்—நின்று
களிப்பி லாடு வதுமேன்.

—துரையர்

## தெரிந்த பெயர், தெரியாத விபரம்

## 'பாட்மின்டன் ஆட்டம்'

பாட்மின்டன் என்னும் ஆட்டம் எந்தத்தேசத்தில் பிறந்தது என்று கேட்டால், உடனே 'அது ஐரோப்பாவில்தான் பிறந்திருக்கவேண்டும், அதன் பெயரே அதைச் சொல்கிறதே!' என்று சொல்வீர்கள்.

ஆனுல்—

அதுதான் இல்லை! 'பாட்மின்டன்' இந்தியாவுக்கே உரிய ஆட்டமாகும். பல நூற்ருண்டுகளுக்கு முன்பாகவே 'பாட்மின்டன்' இந்தியாவில் ஆடப்பட்டு வந்திருக்கிறதாம். ஆனுல், அதற்குஇப்பொழுது வழங்கும் பெயர் அப்போது இல்லை. 'பூனு' என்றபெயர் அப்போது இருந்ததாம்.

பின்னர், இந்தியாவில் வர்த்தகம் செய்யவந்து நாட்டின் ஆட்சியையே கவர்ந்துவிட்ட ஆங்கிலேயர்களை இந்த 'பூனு' ஆட்டம் மிகவும் கவர்ந்ததாம். அதிலும் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளுக்கு இது மிகமிகப்பிடித்துப்போய்விட்டதாம். அவர்களில் சிலர்தான் இந்தஆட்டத்தை1930-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆடத்தொடங்கினுர்களாம். அதுமுதல்கொண்டு 'பூனு' என்ற இந்த ஆட்டம் ஆங்கில நாடுகளில் அறிமுகமாகியது.

ஆனுல், டியூக் ஆஃப் பீஃபோர்டு என்னும் பிரபு தம்து சொந்த ஊராகிய 'பாட்மின்டன்' என்னும் இடத்தில் இந்த ஆட்டத்தை ஆடத்தொடங்கி பிரபலப்படுத்தியபின்னர் தான் இதற்குப் பெரும் மதிப்பு ஏற்படலாயிற்று. 'பாட்மின்டன்' என்ற பெயரும் அதனுல் ஏற்பட்டது.

—பாமி

## வலி. வடக்கு ஆசிரியர் சங்க பேச்சுப் போட்டி முடிவுகள்

சென்ற வியாழக்கிழமை (16-2-67) யூனியன் கல்லூரியில் நடந்த பேச்சு, சங்கீதப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் விபரம் பின்வருமாறு:-

பேச்சுப்போட்டி (தமிழ்) கீழ்ப்பிரிவு, பெண்கள்: எஸ். ரஜனி (மகாஜனுக்கல்லூரி), வி. விஜயராணி (மகாஜனுக் கல்லூரி கே. திலகவதி (ஸ்கந்தா).

ஆண்கள்; என். சோதிநாதன் (மகாஜனு), எஸ். சுரேஷ்குமார் (யூனியன்), ஏ. ஆர். ஏ. லோகநாதன் (சென்ஹென்ரி).

மத்தியபிரிவு, பெண்கள்: என். மனேராணி(மகாஜனு) ஆர். இந்திராணி (ஸ்கந்தா), எஸ். வசந்தி (யூனியன்).

ஆண்கள்: ஸ்ரீசிவகுமாரன் (மகாஜனு), கே. ஜெயசீலன் (மகாஜனு), எஸ். சந்திரலிங்கம் (மகாஜனு).

மேற்பிரிவு, பெண்கள்: ரி. கருணுநிதி (யூனியன்), ரி, தனலாபதி (நடேஸ்வரா) வி. சாரதா (மகாஜனு).

ஆண்கள்: என். சாந்திநாதன் (மகாஜனு), என். சண்முகலிங்கம் (மகாஜனு), எஸ். லிங்கவேலாயுதம் (நடேஸ்வரா).

அதிமேற்பிரிவு, பெண்கள் கமலேஸ்வரி(யூனியன்), என். கலாதேவி (யூனியன்), கே. தெய்வானைப் பிள்ளை (மகாஜனு).

ஆண்கள்: சி. நவரத்தினம் (யூனியன்), கே. அருந்தவராசா (ஸ்கந்தா), ஏ. இஸ்மெயில் (மகாஜனு).

பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) கீழ்ப்பிரிவு பெண்கள்: என். நதீன் (மகாஜனு), எஸ். விஜயலட்சுமி (யூனியன்), ஜி. லிலானி (யூனியன்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை பற்றி ஓர் ஆராய்ச்சி

-ஓலெக் ஆத்ரியனேவ், டி. எஸ். ஸி.

வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை எட்டிப் பிடித்துள்ள ஓர் உறுப்பே மூளை; இது குறித்து ஆராய்ச்சி செய்வது மிகச் சிக்கலானதொன்று என்பதுடன் மிகவும் சுவையானதுமாகும்.

மூளையின் பிரச்னைகள் குறித்து பல நாடுகளிலும் உள்ள சோதனைக் கூடங்கள் ஆராய்ந்துவருகின்றன மாஸ்கோவிலுள்ள மூளை ஆராய்ச்சிக்கூடம்நடத்திவரும்சோதனைகள்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

சோவியத் வைத்திய அக்கடமியின் மூளை ஆராய்ச்சிக் கூடம் நாற்பது ஆண்டுகட்கு முன்னர் நிறுவப்பட்டது. இந்தக் கூடத்தில் பல புகழ் பெற்ற விஞ்ஞானிகள் பணியாற்றியுள்ளனர்.

புலனுறுப்புக்களில் தொடங்கி, மூளைப்புறணியில் முடிவடையும், அனிச்சை நாணின் பகுப்பான்களின் அமைப்பும், அவற்றின் செயல் முறைகளும்கூட இங்கு அலசி ஆராயப்படுகின்றன. இந்தப் பகுப்பான்களின் மூலமாகத்தான், புற உலகிலிருந்து பெறப்படும் ஒலி, ஒளி, உணர்வுபோன்ற பல்வேறு சமிக்ஞைகளையும் தசைக் கருவிகளிலிருந்தும் உள்ளுறுப்புகளிலிருந்தும் வரும் உணர்வுகளையும் மூளை தெரிந்துகொள்ளமுடிகிறது.

சமிக்ஞைகள் பகுக்கப்பட்டு, அவற்றிற்கேற்றஎதிர்வினைகள் பிறப்பிக்கப்படுவதற்காக, அவை மூளையின் செயல் மையத்திற்கு அனுப்பப்படுகின்றன. இந்தப்பகுப்பான்களின் வேலையையும், அவற்றைத் தொடர்ந்து நடைபெறும் பல்வேறு செயல்களையும் நன்கு தெரிந்துகொண்டால் மூளையின் நடவடிக்கைகளை நாம் அறிந்துகொண்டவர்களாவோம்.

மூளையின் 'பூகோளத்தை' அதாவது அதன் உருவ அமைப்பு, அளவு, அடர்த்தி பல்வேறுபாகங்களிலுமுள்ள செயல்களின் சேர்க்கை பற்றிய பிரிவை, 'வைட்டோ-ஆர்கிடெக்டோனிக்ஸ்' என்கிறோம். இது எவ்வளவு சிக்கலானதுறை என்பதைக் காண ஓர் உதாரணம் போதுமானது. மூளையின் புதிய அரைக்கோளத்தின் மட்டும் 1500 கோடி நரம்பு செல்கள் உள்ளன.

புறணி செல் வெளியின் அளவும், அவை அமைக்கப்பட்டிருக்கும் முறையும், மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மக்களின் நரம்புக்கிரியைகள் மாறுபடுவதற்கு இதுவே காரணமாக இருக்கக்கூடும் எனினும் தேசிய இனங்களின் காரணமாகவோ, வர்ண பேதத்தின் காரணமாகவோ, எந்த அமைப்பும் மனித மூளையை வேறுபடுத்துவதாகத்தெரியவில்லை.

மேலும், புறணிப்பகுதி, பிராணிகளிடத்தும் மனிதர்களிடத்தும் வெவ்வேறு வகையாக வளர்ச்சியடைந்துள்ளது. மூளைப்புறணியின் சில பகுதிகள், மனித வாழ்வின் ஆரம்ப காலத்திலும் வேறு சில நாட்பட்டும் வளர்ச்சியடைகின்றன. உதாரணமாக, மூளையின் முன்பகுதி, பக்கப்பகுதி ஆகியவை நாட்கழித்தே தங்களது வளர்ச்சியை பூரணப்படுத்துகின்றன. பேச்சு அறிவார்ந்த செய்கைஆகியவற்றிற்கு இப்பகுதிகளே காரணமாக உள்ளன.

மூளைப் புறணியில்பிரதானமாக மூன்று வகை நரம்பு செல்கள் இருப்பதாகவும் கட்டுப்பட்ட அனிச்சைகள் ஏற்படும்போது ஒளித்தூண்டலால் ஏற்படும் நரம்புக் கிரியைகள், ஒலித்தூண்டலால் ஏற்படும் நரம்புக் கிரியைகளைக் காட்டிலும் நீண்ட காலத்திற்கு செல்களில் பதிகின்றன என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

நரம்புசெல்களின்இணைப்புகளான ''ஸினுப்ஸிஸ்'' என்பனவற்றை பல ஆயிரம் மடங்குபெரிதாக்...னல்தான் கண்களுக்குப் புலனாகும். தவிர புறணியில் பல நரம்பு அங்கங்கள்—இவற்றிற்கு ''ஃபைபீரில்''கள் என்று பெயர்உள்ளன. இவையும் மூளைக்கிரியைகளில் முக்கிய பங்கு வகிப்பவையே.

உட்கூறியல், புறக்கூறியல் உயிர்செல் ரசாயனவியல் ஆகிய பல துறைகளும் எங்கள் கூடத்தில் ஏககாலத்தில் மூளையின் புதிரை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. அமைப்பையும் அவற்றின் உட்கூறியலையும் ஆராயும் அதே போதில், நரம்புமண்டலத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவரும் வளர்சிதைமாற்றமும் அதன் வகைகளும் ஆராயப்படுகின்றன. புறணியிலும், பிற செய்கை பகுப்பான்களிலும் நடைபெறும். ஆக்ஸிஜன் வளர்சிதை மாற்றம் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளது.

இந்தக் கூடத்தில் ஆரம்பகாலப் பிராணிகளின் மூளையிலிருந்து, மனித மூளை வரையுள்ள பரிணும வளர்ச்சியைக்காட்டும் அத்தனை மாதிரிகளையும் வைத்திருக்கிறார்கள். இந்த ஆய்வுக் கூடப் பணியின்மூலம் மனித மூளையின் கிரியைகள்பற்றிய பல புதிர்களும் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சனீஸ்வரன் கோயில்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தலவிருட்சமான தர்ப்பை ஏராளமாக வளர்க்கப்படுகிறது. இங்குவரும் பக்தர்கள் தர்ப்பை முடிச்சுப் போட்டுக் கொள்வார்கள். அல்லது தங்கள் துன்பங்களைப் பிளப்பதுபோல தர்ப்பையை இரண்டாகப் பிளந்துபோடுவார்கள். நளநாராயண சுவாமி கோவில் என விஷ்ணு ஆலயம் ஒன்றும்திருநள்ளாற்றில்உண்டு.

திருநள்ளாறு பாடல் பெற்ற தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகளும் அருணகிரிநாதரும் இத்தலத்தின் புகழ்பாடியுள்ளனர். ஞானசம்பந்தரின் பாடல்கள் பிரசித்தமானவை.

கோவில் பரிபாலனக் குழுவில் தருமபுரம் ஆதீனகர்த்தரும் இடம்பெற்றிருக்கிறார். காரைக்கால்ஆட்சிஅதிபர் குழுவின் தலைவராக இருந்துவருகிறார்.

மாயூரம்-பேரளம்-காரைக்கால் ரயில் மார்க்கத்தில் திருநள்ளாறு ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. மாயூரம், பொறையார், கும்பகோணம், நாகபட்டினம் ஆகிய ஊர்களிலிருந்து பஸ்ஸிலும் சுலபமாக திருநள்ளாறு போய்ச்சேரலாம்.

லட்சார்ச்சனை செய்ய வேண்டுவோர் ரூ. 450-ம், அரைலட்சம் அர்ச்சனைசெய்வோர் ரூ. 225-ம், கால் லட்சம் அர்ச்சனை செய்வோர் ரூ. 120-ம் சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய ரூ. 5-ம் செலுத்தவேண்டும். அர்ச்சனைகளில் நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் தபால்மணி ஆடர் அனுப்பியும் அதனை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். பெயர், நட்சத்திரம், இராசி முதலான விபரங்களைக் குறித்து அனுப்பினால் அவர்கள் பெயருக்கு அர்ச்சனைசெய்து பிரசாதம் தபாலில் அனுப்பிவைக்கப்படுகிறது.


யாழ்ப்பாண வாசிகளுக்கு
500 பிளட்டினம பி. பி. பி. பேனைகள்
இலவசம்



6 பெரிய சைஸ் அல்லது 10 ஸ்டான்டர்ட் சைஸ் போர்ஹான்ஸ் வெற்றுப் பெட்டிகளை போர்ஹான்ஸ், மே/பா. த. பெ. 1031, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பும் முதல் 500 யாழ்ப்பாண வாசிகள் ஒவ்வொருவருக்கும் விசேட போர்ஹான்ஸ் அன்பளிப்பாக ஒரு பிளட்டினம் பி. பி. பி. பேனை இலவசமாக அளிக்கப்படும்.

எப்பொழுதும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்
பற்பசை

புகழ்பெற்ற பல்வைத்தியரின்
தனித்தயாரிப்பின் முறைக்கு தயாரிக்கப்பட்டது

உங்கள் பற்கள் முளைப்பதற்குப் பல மாதங்கட்கு முன்பே பல்லிறுகள் தோன்றின. ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே வலிய பற்கள் தோன்றும். இவ்வலிய பற்கள் உங்கள் ஈறுகள் ஆரோக்கியமாக இருக்கும்வரை திடமானவையாக இருக்கும்.

நிச்சயமாக உங்களுக்கு உரமான வெண்ணிறப் பற்களும், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளும் வேண்டுமென்றால், பற்பசையில் நுரை பொங்குதல் மட்டும் போதாது. உங்கள் பற்களை வெண்மையாகச் சுத்தஞ் செய்வதற்கும், ஈறுகளை உரம்பெறச் செய்வதற்கும் போர்ஹான்ஸ் பற்பசையின் பாதுகாப்பு உங்களுக்கு இன்றியமையாதது.

உரமான, வெண்ணிறப் பற்களுக்கும்
உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளுக்கும்
என்றும் பாவியுங்கள்

போர்ஹான்ஸ்
பற்பசை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


WANTED
A MALE CLERK

Pass in S. S. C. or equivalent Exam. with English Knowledge of typewriting and Book-keeping.

Office Experience and Co-operative Training preferred.

Age 26 - 35

Salary: 100/- — 175/- / 7/50 × 10

with allowance prescribed by the Union

Total initial earnings- 100/+101 60+17/50=219/10

If selected security in cash Rs. 000 .

Applications close on 9-3-67

"Application for Clerk" should appear on the top left hand corner of the envelope

Apply under registered cover with two recent testimonials.

President
Vali West M P.C S Union
Chankanai.
2444



REGAL - JAFFNA
NOW SHOWING
M.G.M.
GET YOURSELF
A GOLLEGE GIRL
Color



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
ஆண்டவன் கட்டளை



MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BRETT HALSEY
as Secret Agent 077
in
Espionage in Lisbon



## வாடகைக்கு லொறி தேவை

இச்சமாசத்தின் ஏற்றுமதி வேலைகளைச்செய்வதற்கு இரண்டுலொறிகளுக்கு மேற்படவைத்திருக்கும் லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சமாசத்தில் இருக்கும் பத்திரத்தில் 28-2-67 க்கு முன் சமாசக் காரியதரிசிக்குச் சேர்க்கப்படவேண்டும். தெரிவுசெய்யப்படும் லொறிச்சொந்தக்காரர் ரூபா 500/- பிணை செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

காரியதரிசி,
தென்மராட்சி ப.நோ.கூ.ச சமாசம்
சாவகச்சேரி, 21-2-67.
2448



## ரெண்டர் அறிவித்தல்

மண்முனை வடகிழக்கு [வ.பி.] கிராம சபையின் 6ம் வட்டாரத்தில் கங்காணியார் கோவில்ரேட்டு திருத்தவேலைக்கு 1967.ம் ஆண்டு பங்குனி மாதம் 4-ந்திகதி சனிக்கிழமைகாலை 10 மணிவரையும் ரெண்டர்கள் என்னுல்ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர் பத்திரங்கள் 2-3-67காலை11மணிவரையும், ரெண்டர்பிணைப் பணம் ரூபா 100/-ம், ரெண்டர் பத்திரப் பணம் ரூபா 5/ -ம் இக்கந்தோரில் செலுத்தியதின் பேரில் வழங்கப்படும். ரெண்டர் பத்திரப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. மேற்கொண்டவிபரங்களை கந்தோர் அலுவலக நேரத்தில் இக்கந்தோரிலும், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கந்தோரிலும் அறிந்து கொள்ளலாம்.

சோ. தர்மசேன,
தலைவர், மண்முனை
வடகிழக்கு [வ. பி.] கி. ச,
2451


## நாய்கள் தொல்லை

மாவிட்டபுரம், வியா

காங்கேசன்துறைப் பட்டின சபை எல்லைக்குள் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது. பொது மக்கள்பலர் இந் நாய்களினுல் கடிக்கப் பட்டுள்ளார்கள்.

## 28 ஏக்கரில் உபஉணவுப் பயிர்

மாவிட்டபுரம், வியாழன்

28 ஏக்கரில் மரவள்ளி, பம்பாய் வெங்காயம் முதலான உப உணவுப் பயிர்கள் பயிரிடப்படுவதாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை அறிவித்துள்ளது.

சிமெந்து தொழிற்சாலைக்கு என்று சுவீகரிக்கப்பட்ட நிலத்தை அரசாங்கத்தின் உணவு உற்பத்தி இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் உபயோகப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட விருக்கின்றன.

## வழலாயில்சின்னமமை

மாவிட்டபுரம், வியாழன்

வழலாயில் சின்னம்மை பரவுகிறதாம்! மல்லாகம் நீதிமன்றத்தில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கொன்று கூப்பிடப்பட்ட போது சம்பந்தப் பட்டவர்கள் கோர்ட்டில்ஆஜராகவில்லை. சிலருக்கு சின்னம்மை கண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையில் அம்மைநோய் பரவி வருவதும் அதன் விளைவுதான் இங்கும் இந்த நோய் ப்ரவுவதற்கான அறிகுறி என்றும் கூறப்படுகிறது. சுகாதாரப் பகுதியினர் தடுப்பு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

## பாக்கு மூடைகள் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறை சுங்க இலாகாவுக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து சுங்கஅதிகாரி திரு. பொ. தெய்வேந்திரம் தலைமையில் சென்ற கோஷ்டி ஊரிக்காடு இராணுவ முகாமுக்கருகில் வைத்துக் கள்ளக்கடத்தல் செய்யப்படவிருந்ததாகக் கூறப்படும் 80 பாக்குமூடைகளைக்கைப் பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப்பாக்கு மூடைகளில் 7 கட்டுமரத்திலிருந்தும் மற்றவை ஒரு வீட்டிலிருந்தும் கைப்பற்றப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக நால்வர் விசாரணை செய்யப்பட்டுவருகிறுர்கள்.

## வடபம்பாயில் கலவரம்

புதுடில்லி, பெப். 22

திரு. வி. கே. கிருஷ்ண மேனன் போட்டியிட்ட வடபம்பாய்த் தொகுதியில் இன்று இரு சாராருக்குமிடையில் கலவரம் ஏற்பட்டது. இதனுல் பல குடிசைகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இறுதியில் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தார்கள். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு திரு. கிருஷ்ண மேனன் நேரில் சென்று அமைதியை நிலைநாட்டுமாறு கேட்டுக் கொண்டார்.

## புதிய நிர்வாகிகள்

காரைநகர், வியா

காரைநகர் பொது நல சேவாசங்க நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ச. வைரமுத்து, செயலாளர் திரு. ச. செல்வத்துரை, பொருளாளர் திரு. வ. சண்முகநாதன். ஒன்பது உறுப்பினர்களைக்கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

டயர்கள்

''பயர்ஸ்ரோன்'' 750/20-12 PLY, 520-13, டயர்கள் முற்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ராமகிருஷ்ணுஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1567

புத்தகம்!

மூன்றே மாதத்தில் இங்கிலிஷ் பாஷையை கற்றுக் கொள்ள வகுக்கப்பட்ட நூல் தமிழில் ரூபா 1-00. Gnanaraj, P o Box 357, Colombo 1520

காணி

சாவகச்சேரி அரசாங்க ஆஸ்பத்திரிக்கு முன்னுல் வீடுகட்டுவதற்கு வசதியான காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. ஏ. ஐயாத்துரை (P. H. I.) கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். 1565

வீடும் காணியும்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் இந்து மகளிர்கல்லூரிக்குமிடையில் பிரதான வீதியில் தற்கால வசதிகளுடன் கூடிய மூன்று பரப்பிலுள்ள புதிய வீடும் வளவும் விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் கீழ்க்காணும் விலாசதாருடன் தொடர்புகொள்க. து. சிவராசா, பலாலிரேட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1573

## சேவை

எங்களிடம் குஞ்சுகள் வாங்கியவர்கள் பால்கட்டவோ, ஊசிபோடவோ சிரமப்பட வேண்டியதில்லை. எமக்குத் தெரிவிக்கவும். ஒழுங்குகள் செய்துதருகிறேம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1552

## வாடகைக்கு

கடை

காங்கேசன்துறை வீதியில் சுன்னுகம் யூனியனுக்கு முன்பாக உள்ள கடைக் கட்டிடம் வாடகைக்கு விடப்படும். மின்சார வசதியுண்டு. விபரங்கட்கு S. அல்பிறெட், 'சீலஇல்லம்', மல்லாகம். 1564

## கல்வி

மாலை வகுப்புக்கள்

யாழ் கல்லூரி மாலை இரவு வகுப்புகள் விஞ்ஞானம், கலை வர்த்தகம், சிங்களம், ஆங்கிலம். தட்டெழுத்து சுருக்கெழுத்து மற்றும் எல்லாப் பாடங்களும் தினசரி மாலை 6-30 மணிதொடக்கம் இரவு 9 மணிவரை நடைபெறும். இருபாலரும் படிக்கலாம். 29, பருத்தித்துறை ரேட், யாழ்ப்பாணம். 1572

வகுப்புகள்

தட்டெழுத்து, சுருக்கெழுத்துதமிழில்ஆங்கிலத்தில், சிங்களம், கணக்கு பதிவியல், வர்த்தகம், ஆங்கிலம் ஜி. சி. இ. சாதாரணம் கலை விஞ்ஞானம், வர்த்தகம், மேல்தரம், பொருளாதாரம், கணக்குப்பதிவியல் தூயகணிதம் (Pure Applied) யாழ் கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம்.

பெண்கள் கிளை: 29, பருத்தித்துறை ரேட், யாழ்ப்பாணம். 1571

சிங்கள வகுப்பு

எமது கலாசாலையில் ஆரம்ப சிங்கள வகுப்பொன்று அண்மையில் ஆரம்பிக்க இருக்கிறது. சேர்ந்து கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். 8 மாதத்துக்குள் G. C. E. பரீட்சையில் சித்தி பெறலாம். A. P. டானியல், தபாற் கந்தோரடிகர, வெட்டி. 1566

மெக்கானிஸ வகுப்புக்கள்

மோட்டார் மெக்கானிஸம். புதிய வகுப்புகள் பங்குனி மாதம் ஆரம்பிக்கப்படும், யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம். 1570


கொழும்பு

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் வேலைநிறுத்தம்?

கொழும்பு, வியா

48 கோரிக்கைகளை முன்வைத்துகொழும்பு தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் இம்மாதம் 26-ம் திகதி முதல்வேலைநிறுத்தம்செய்ய முடிவுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்றமாணவர் யூனியனின் அவசரக் கூட்டமொன்றில் மேற்கண்டமுடிவுசெய்யப் பட்டது.

மதிப்பீடு டிப்ளோமாவை ''எஸ்டேட் மனேஜ்மென்ற்' இறுதிப் பரீட்சைக்குச் சமமாக மதித்தல், வர்த்தக டிப்ளோமாவை வர்த்தக பட்டதாரிப் பட்டத்துக்குச் சமமாகமதித்தல், கல்விக் கூடவசதிகள், வாசிகசாலை வசதிகள், உதவிப்பணம்ஆகியன முக்கியகோரிக்கைகளாகும். கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றுவது பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த இறுதித்தினமாக பெப்ரவரி 18ஐ மாணவர் யூனியன் வரையறுத்து வைத்திருந்தது. ஆனுல் 18-ந் திகதி எந்தவித பலனும் கிடைக்காமல்போகவே, மாணவர் யூனியன் வேலைநிறுத்த முடிவை எடுத்துக் கொண்டது, இக் கோரிக்கைகள் மூன்றுவருடமாக புறக்கணிக்கப்பட்டுவந்ததாம்.

பட்டதாரி மாணவர்களுக்குக் கொழும்பிலும் பேராதனையிலுமாக ஏராளமாகப் பணத்தை இறைக்கும் அரசாங்கம், நாட்டின் தலைபிடிகளோடு அணுகப்போகும் தொழில்நுட்பமாணவர்களுக்கு ஏன் உதவிப்பணமோ கடன்வசதிகளோ அளிக்கக் கூடாது? என்று மாணவர் யூனியன் தலைவர் திரு. கிளெமன் பெரேரா தொழில்நுட்ப இலாகாவினருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.


அருணு ஏஜென்ஸீஸ்
கோழிப் பண்ணை

ஆர். ஐ. ஆர்., ஒஸ்ரலொம், 'நியூ கா ம்ஷயர், வைற்லெக்கோன் 'ஒரு நாள் குஞ்சுகள்- 60 சதம். ஒரு மாசக்குஞ்சுகள்-ரூபா 1-50. இரண்டு மாசக் குஞ்சுகள்பால்-கட்டி, ஊசிபோட்டு, பூச்சி மருந்து கொடுக்கப்பட்டவை. ரூபா 3/-. பதிவு செய்யும்போது முற்பணம் கட்டவேண்டும். குறிப்பு: ஞாயிற்றுக்கிழமைகளில் எமது ஸ்தாபனம் பதிவுகள் ஏற்றுக்கொள்ளாது. பண்ணையைப் பார்வையிட விரும்புவோர் பார்வையிடலாம்.

அருணு ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 2414



நவா
கொம்பனித்தெரு
இங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
கொழும்பு வெள்ளவத்தை யாழ்ப்பாணம்

3வது வெற்றி வாரம்!

விஜயா ஸ்ரீ கிருஷ்ணு விஜிதா
மட்டக்களப்பு திருமலை ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால், ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்

காக்கும் கரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி

# பீகார், பஞ்சாப் முதன்மந்திரிகளுடன் 34 ராஜ்ய மந்திரிகள் தோல்வி

## ஆச்சார்ய கிருபளானியும் தோற்ருர்

இந்தியத் தேர்தல்களில் இதுவரை வெளிவந்த முடிவுகளிலிருந்து மத்திய பிரதேசத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கேரளத்தில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்த ஐக்கிய முன்னணி ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. 133 அங்கத்தவர்களைக் கொண்ட கேரள சட்டசபையில் பத்துக்கும் குறைவான காங்கிரஸ் அங்கத்தவர்களே எதிர்க் கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திரிபுராவில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சிபுரியும். ராஜஸ்தானில்காங்கிரஸ் கட்சிதான் அதிக ஸ்தானங்களைப் பெற்றுள்ள தனிக்கட்சியாக விளங்குகிறது.

### 34 ராஜ்ய மந்திரிகள் தோல்வி

இதுவரை வெளிவந்த முடிவுகளிலிருந்து இந்திய ராஜ்யங்கள் பலவற்றிலும் மந்திரிகள் பலர் தோல்வியடைந்திருக்கின்றனர். நிதிமந்திரிகள், உணவு மந்திரிகள் தோல்விகண்டுள்ளனர். பல்வேறு ராஜ்யங்களிலும் 34 மந்திரிகள் தோல்வியடைந்திருக்கின்றனர். பீகாரிலும் பஞ்சாபிலும் முதன்மந்திரிகள் தோல்வியடைந்துள்ளனர். பீகார் முதன்மந்திரி கே. பி. சகாய், தாம் போட்டியிட்ட இருதொகுதிகளிலும் சுயேச்சை அபேட்சகர்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிருர். அஸ்ஸாம் குஜராத், ஹரியாளு, மத்தியபிரதேசம், மைசூர், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஒரிஸா ஆகிய ராஜ்யங்களின் முதன்மந்திரிகள் வெற்றி பெற்றுள்ளனர். திரிபுரா, மணிப்புரி ஆகியவைகளின் முதன்மந்திரிகளும் வெற்றி பெற்றிருக்கின்றனர். குஜராத்தில் நிதிமந்திரியும் சபாநாயகரும் சுதந்திரக்கட்சி அபேட்சகர்களிடம் தோல்வியடைந்திருக்கின்றனர்.

இந்தியயூனியன்மராமத்து மந்திரி திரு. மேஹசந்த் கன்ஞவும் உதவி ரயில்வே மந்திரிஷாம்நாத்தும் தோல்வியடைந்தனர். யூனியன் தகவல் மந்திரி ராஜ்பகதூர், யூனியன் நிதிமந்திரி சசீந்திரசௌத்ரி, யூனியன் உணவு மந்திரி சி. சுப்பிரமணியம் ஆகியோர் தோல்வியடையும் நிலையிலுள்ளனர்.

### இந்திரா, மொரார்ஜி, சவான்

திருமதி இந்திரகாந்தி ராயபரேலி தொகுதியில் ஐம்பதினுயிரத்துக்கு அதிகமான வாக்குகளாலும், மொரார்ஜி தேசாய் ஒரு லட்சத்துக்கு அதிகமான வாக்குகளாலும், சவான் எண்பதினுயிரம் வாக்குகளாலும் வெற்றிபெற்று வருகின்றனர். ஹரியாளுவில் முன்னுள் யூனியன் உள்விவகார மந்திரி குல்ஸாரிலால்நந்தாவெற்றி பெற்று வருவதாகவும்,யூனியன் கல்விமந்திரி பத்ரு தீன் அலிஅகமத், யூனியன தகவல்மந்திரி ராஜ்பகதூர் ஆகியோர் ரோல்வியடைந்து வருவதாகவும் உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மினுசோனியிடம் தாம் தோற்றுவிட்டதாக அவருடன் போட்டியிடும் பட்டேல் ஒப்புக்கொண்டுள்ளார். உத்தர பிரதேச முன்னுள் முதன்மந்திரி சி. பி. குப்தா 70 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றிருக்கிருர். மைசூர் முதன் மந்திரி ஹனுமந்தையா தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர். மற்றெருமத்திய மந்திரியான திரு. எஸ். கே. பட்டீல், தோல்வியடைதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கன்னு ஷாமநாத் தோல்வி

இந்திய யூனியன் முன்னுள் பாதுகாப்பு மந்திரியும் காங்கிரஸிலிருந்து வெளியேறி சுயேச்சையாக வடகிழக்குப் பம்பாய்தொகுதியில் போட்டியிட்டவருமான, திரு வி. கே. கே. மேனன், காங்கிர செயலாளர் அதுல்யகோஷ் ஆகியோரும் தோல்வியடையும் நிலையிலுள்ளனர்

### கிருபளானி, காமத் தோல்வி

எதிர்க்கட்சித் தலைவர்களில் பழம்பெரும் அரசியல் அறிஞர் ஆச்சார்ய கிருபளானி மத்தியபிரதேசத்தில் ரயபூர்த் தொகுதியில் தோல்வியடைந்தார். பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் திரு. எச். வி. காமதும் தோல்வியடைந்தாத்ர்.

### சில முடிவுகள்

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் தொகுதி முடிவுகள் சில வருமாறு:-

**பட்டுக்கோட்டை**-த்தொகுதியில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகர் ஏ. ஆர். மாரிமுத்து வெற்றிபெற்றுள்ளார். அவருடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரும் சுயேச்சை அபேட்சகரும் தோல்வியடைந்தனர். சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தொகுதியிலிருந்து பிரஜா சோஷலிஸ்ட் அபேட்சகர் சுரேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் கறுப்பண்ண கவுண்டர் தோல்வியடைந்தார். இருசுயேச்சை அபேட்சகர்களும் ஜாமீன் இழந்தனர். தஞ்சாவூரில் காங்கிரஸ் அபேட்சகர் பரிசுத்த நாடார் வெற்றிபெற்ருர். திருத்துறைப் பூண்டியில் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான மணலி கந்தசாமியும், காங்கிரஸ் அபேட்சகர் எஸ். ராஜகோபால் பிள்ளையும், தி.மு.க. அபேட்சகர் என். தர்மலிங்கத்திடம் தோல்வியடைந்தனர். திருவொற்றியூரில் நடந்த நேரடிப் போட்டியில் காங்கிரஸ் அபேட்சகர் வி. வெங்கடேஸ்வரலுவை தி. மு. க. அபேட்சகர் ஏ. பி. அரசு தோற்கடித்தார். குடியாத்தத்தில் மார்க்ஸீய கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர் வி. கே. கோதண்டராமன் வெற்றிபெற்ருர். சிவகெங்கையில் காங்கிரஸ் அபேட்சகர் ஆர்.வி. சுவாமி நாதனை தி. மு. க. அபேட்சகர் எஸ். சேதுராமன் தோற்கடித்தார். தர்மபுரியில் தி. மு. க. அபேட்சகர் எம். சுப்பிரமணிய கவுண்டர் தம்முடன் போட்டியிட்ட காங்கிரஸ், ஜனசங்க அபேட்சகர்களைத் தோற்கடித்தார்.

### லோகசபை கட்சி நிலை

இந்திய பார்லிமெண்ட் [லோகசபை] தேர்தல் முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. இது வரை வெளிவந்த முடிவுகளின் படி கட்சிநிலை வருமாறு:-

**வெளியான முடிவுகள் - 97**

**காங்கிரஸ் — 53**
**ஜனசங் — 17**
**சுயேச்சை — 10**
**ச. சோஷலிஸ்ட்: 03**
**கமயூனிஸ்ட் 02**
(வலதுசாரி)
**சுதந்திரா: 06**
**கமயூனிஸ்ட்: 06**
[மார்க்ஸியஸ்]

### முதன் மந்திரி ராஜினுமா

பீகார், பெப். 23

பீகார் ராஜ்ய முதன் மந்திரி திரு. கே.பி.சகாய் தாம் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தமது ராஜினுமாவை இன்று சமர்ப்பித்தார்.

**விற்பனைக்கு**

திராட்சைக் கன்றுகள்!
உலக கீர்த்தி பெற்ற தித்திப்பான வகைகள் அல்பொன்சே லவலீ, டற்றியடி பேரூத், டச்செஸ். கோல்டின் மஸ்கற், நியாகரு, ரூயல் அஸ்கொற், செனெகா, சேவே வில்லாட் வல்தம் குரூஸ், சான்ரே கறன்ற். ரூபா 5. 2, ஒல்ட்பாக் வீதி, யாழ்ப்பாணம். 1568

| ராஜ்யங்கள் | மொத்த ஸ்தானங்கள் | காங்கிரஸ் | மார்க்ஸீய கம்யூனிஸ்ட் | வலதுசாரி கம்யூனிஸ்ட் | ஜனசங் | சுதந்திரா | தி. மு. க. | முஸ்லிம் லீக் | சம்யுக்த சோஷலிஸ்ட் | பிரஜா சோஷலிஸ்ட் | குடியரசு | அகாலிதள பதேசிங் | அகாலிதள தாராசிங் கட்சி | போர்வார்ட் ப்ளாக் | இதர கட்சிகள் | சுயேச்சை | சர்வகட்சி மலைத்தலைவர்கள் | வெளிவந்த மொத்த ஸ்தானங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 234 | 29 | 5 | 1 | | 9 | 68 | | 4 | 4 | | | | | | 4 | | 124 |
| கேரளம் | 133 | 7 | 55 | 9 | | | | 6 | 12 | | | | | | | 9 | | 196 |
| மைசூர் | 216 | 84 | | 1 | 2 | 10 | | | 2 | 15 | | | | | | 15 | | 129 |
| ஆந்திரா | 287 | 93 | 04 | 4 | | 15 | | | | | | | | | | 33 | | 150 |
| மத். பிரதேசம் | 296 | 167 | | 1 | 77 | 7 | | | 10 | 9 | | | | | | 22 | | 293 |
| ராஜஸ்தான் | 184 | 53 | | | 14 | 22 | | | 3 | | | | | | | 6 | | 98 |
| உத். பிரதேசம் | 425 | 57 | 3 | 2 | 4 | 4 | | | 9 | 3 | 1 | | | | | 11 | | 108 |
| மே. வங்காளம் | 280 | 140 | 14 | 9 | | 1 | | | 7 | 7 | | | | 7 | 10 | 44 | | 239 |
| பஞ்சாப் | 104 | 47 | 2 | 5 | 6 | | | | 1 | 9 | 3 | 5 | 2 | | | 9 | | 89 |
| ஹரியாளு | 81 | 41 | | 1 | 6 | 1 | | | | | 2 | | | | | 14 | | 65 |
| பீகார் | 318 | 37 | 01 | 09 | | 3 | | | 21 | 6 | | | | | | 18 | | 104 |
| அஸ்ஸாம் | 126 | 5 | | | | | | | | | | | | | | 1 | 5 | 11 |
| திரிபுரா | 30 | 22 | | 1 | | | | | | | | | | | | | | 23 |
| காஷ்மீர் | 75 | | | | | | | | | | | | | | | | | |
| குஜராத் | 168 | 2 | | | | 1 | | | | | | | | | | | | 3 |
| மகாராஷ்டிரம் | 270 | 108 | 02 | | | | | | 5 | 4 | | | | | | 7 | | 142 |
| ஒரிஸா | 140 | 9 | | | 14 | | | | 3 | | 1 | | | | | 8 | | 35 |
| ஹிமாலய பி தே. | | 6 | | 1 | 2 | | | | | | | | | | | | | 9 |

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் [illegible] கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் [illegible] 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org